989

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஹு ஜூன்மீ 7உ [No. 23.

20 NOV 1928

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	441
2.	காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L.	443
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	446
4.	தமிழ்ப் பாடம்	448
5.	இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி E. T. சொக்கம்மாள் B. A., L. T.	451
6.	வெற்றியெனுங் குதர்க்கம் (Translation) K. இராஜகோபாலன்	453
7.	மலர்வனம் "மதுகரம்"	454
8.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L.	455
9.	வர்த்தமானம்	459

கலா நிலயம்.

விலாசம் வேண்டும்.

இந்தச் சைமன் கமிஷனை முன்னிட்டு வாதாடுகின்ற நோக்கம் ஒன்றும் எமக்கு விளங்கவில்லையே இதற்கு நாமிங்கு உதவி செய்தால் கெட்டது குடி என்பார் ஒரு சாரார். ஒத்து நடவாது இச் சமயத்தைப் புறக்கணித்தால் கெட்டது குடியென்பார் மறு சாரார். இருவிதத்திலும் எந்தக் குடி எப்படிக் கெடும்?

கமிஷனோடு சேர வேண்டுமென்றும் வேண்டாவென்றும் எதிரெதிர் வாதிப்போர் காரணங்களை இங்கு ஆராய்வது எம் நோக்கமல்ல. அது அரசியல் கட்சிகளில் ஊடாடுவார்க்குரிய செயல். இந்தியரிற் சிலபேரை அந்தக் கமிஷனில் சமநிலையாகச் சேர்த்துக் கொள்ளாததால் நம் குறைகள் நீங்குகின்ற நீதிபெற மாட்டோம், என்ற காரணத்தால் விலகி நிற்பவர், நம்குறை யென்னவென்றும் அக்குறையை நீக்குதல் யாவரால் ஆகுமென்றும், சத்தியமாய் மனச்சாக்ஷிக்கு மாறுபாடின்றித் தர்க்கத்தோடியன்று சொல்வாரோ.

நமக்குள்ள கஷ்ட நஷ்டங்களை, அவை எவையேயாயினும், எந்தக் கமிஷனினாலும் விலக்கவேனும் பெருக்கவேனும் முடியாதென்பதே எம் கருத்து. அப்படித்தான் முடியுமென்று வைத்துக்கொண்டாலும் இந்தியர் சேராததால் நீதிக்கு என்னவித இடையூறு நேர்ந்துவிடக்கூடும்? ஆங்கிலேயர்களில் பக்ஷபாதமில்லாமல் நீதியை நடுநிலையாக வழங்கவல்லவர்களில்லை யென்றெண்ணமா? அல்லது இந்தியர் யாவரும் நீதிமான்கள் என்னும் நினைவா? இருவரும் மனிதர். இருவரிலும் நல்லவர்களும் உளர், அல்லாதவர்களும் உளர். சுயநலம் மறந்து நடுநிலை வழங்குவார் இருதிறத்துஞ் சிலர் உளர், பலர் இலர்.

கமிஷனை மறுப்பவரில் மற்றொரு வகுப்பினர், இவர் தம்தொகுதியே பெரியது, இந்தியரைச் சேர்த்துக் கொள்ளாததால் நமது சுயமரியாதை (இச்சொற்றொடரின் உரிமையை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை) நிந்திக்கப்பட்டுளதென விளம்பி, நிந்தனைக்கு நிந்தனை எதிர் வழங்கும் முறையை அநுசரித்து, அக்கமிஷனிற்கு முகங்கொடுக்கப்படாதென்பர். மனிதர்தம் எண்ணத்துள் இக்காலத்தில் புகுந்திருக்கின்ற பல விபரீதங்களில் இந்தச் சுயமரியாதை என்னும் புதுமை யொன்று. சுயமரியாதை என்றால் என்ன? யாராயினும் அதற்குச் சூத்திரம் சொல்ல வல்லார் உளரோ! சுயமரியாதை என்ற ஒரு சொல்லைக் கிளப்பிவிட்டு, "ஐயோ, சுயமரியாதை இழந்து விட்டீர் பாவம்" என்று சொல்லிக்கொண்டே வந்தால் கேட்கின்றவர்கள் 'இழந்து விட்டார்களாக்கும்' என்று 'சுய இரக்கம்' கொள்ளத் தலைப்படுகின்றனர். (சுய இரக்கம்' என்றால் என்னவென்று தயை கூர்ந்து எம்மைக் கேளாதீர். ஏதாவதொரு வார்த்தையைப் பிடித்து அதற்குமுன் ஒரு 'சுய'வைப் போட்டு வைத்தால் அதன் விதியின்படி ஆகின்ற அர்த்தம் ஆகட்டுமே) "உன்னை அம்மா அடித்தாளா" என்று பத்துத்தரங் கேட்டால் குழந்தைகள் அழத் தொடங்குகின்ற செய்தி யிது.

நம் தமிழ் நாட்டிலிருந்து சீமையில் ஐ. ஸி. எஸ். பரிக்ஷைக்குப் போயிருந்த நாலைந்து மாணவர்களை ஒரு பரீக்ஷகர் வாய் மூலமாகத் தமிழிலக்கணத்தில் பரிக்ஷை செய்துகொண்டிருந்தார். அவர் ஆங்கிலேயர். அவருக்குத் தமிழொன்றுந் தெரியாது. அவர் ஆதியில் தமிழ் ஜில்லாக்களில் உத்தியோகமா யிருந்தபோது 'ஒக்க

பிலேரியும்', 'முன்ஷி'யும் வைத்து இரண்டொரு வார்த்தை கற்றுக் கொண்டவர். நல்லது, இந்த நிபுணர் பரிக்ஷை செய்பவர். தமிழ் தேசத்திலிருந்து போயிருந்த மாணவர் நாலைந்துபேர் எதிரே உட்கார்ந்திருக்கின்றனர். "குற்றியலுகரம் என்றால் என்ன?" என்று கேள்வி போட்டார் பரீக்ஷகர். முதல் மாணவன் அறிந்திலன், சும்மாவிருந்தான். மற்ற மூவரும் அவ்வாறே. ஐந்தாம் மாணவனையும் இக்கேள்வி கேட்டார். அவன் சிறிதும் தாழாது, "குற்றியலுகரம் என்றால் எனக்கென்னவென்று தெரியவில்லை. பேந்தப் பேந்த விழிக்கின்றேன். உன்பாடும் அப்படித்தான்" என்று மொழிந்தான். பரீக்ஷகருக்கு விளங்கவில்லை. 'குற்றியலுகரம் என்றால்" என்று இவன் துவக்கியதைக்கொண்டு அதன் இலக்கணந்தான் சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணி, அவனுக்கு முழு 'மார்க்கும்' கொடுத்துவிட்டார். "சுயமரியாதை என்றால் என்ன?" வென்று கேட்போர்க்குக் கிடைக்கும் விடை பெரும்பாலும் அந்த ஐ. ஸி. ஸ். மாணவன் கொடுத்தது போன்றே இருக்கும். அதனைப் பெறுகின்றவர்களும் அனேகர் அப்பரீக்ஷகர் நிலையிற்றான் இருக்கின்றனர்.

சுயமரியாதை என்பதற்குத் தன்னைப்பிறன் நிந்திக்கப் பொறாத தன்மை என்பது பொருளாகாது. ஒரு கன்னத்திலடித்தால் மறுகன்னத்தையும் காட்டும்படி கற்பித்த ஏசுகிறிஸ்து, சுயமரியாதையை இழப்பதற்குப் பழக்கிவைக்கவில்லை. கால்பணிந்த அரிச்சந்திரனை விச்வாமித்திரன் உதைக்க, அவ்வரசன் தன் மகுடம்பட்டு, "நொந்ததோ, நும் பாதம் நொந்ததோ'வென முனிவனின் பாதங்களைத் தடவியது சுயமரியாதையைக் காப்பாற்றத்தெரியாததாலல்ல தனக்கொருவன் நிந்தனை இழைத்தான் இழைப்பான் அல்லது இழைக்கக் கூடும் என்று எண்ணுகின்றவரிடத்தில் சுயமரியாதை இல்லை என்பது நிச்சயம். இருந்தாலல்லவோ அதைக் காப்பாற்றுகின்ற கஷ்டமெல்லாம். பெரியோரென்று புகழாது யாரையும் சிறியோ ரென்றும் இகழாது, தன்னையும் பெரியவனென்றும் சிறியவனென்றும் நினையாது வாழுமொருவன்தான் சுயமரியாதைக்குப் பாத்திரனாகின்றான் மற்றநினைவுகள் யாவும் தாமச குணமே பிரதானமானவை. அதனால் நன்மையுண்டோ? தன் மானத்திற்கோ பொருளிற்கோ, மற்றெதற்கோ பிறரால் ஒரு கெடுதி வருமென்று அஞ்சுபவன் அல்லாது வேறு அடிமையில்லை. "அளியன் செய்த தீவினையே அன்றிலாக வந்தாயோ" வெனக் கம்பர் சீதையைக்கொண்டு சொல்லுவித்த தத்துவத்தை உணர்ந்தவர்தாம் யாரையும் குறை கூறார், அறையும்கூவார் தன்னாற்பிறர்க்கொருகுறைநேராது காக்கவேண்டும் என்ற வொரே எண்ண முடையவன் சுயமரியாதையை உடையவன் என்னலாம்.

இதுகாறும், கமிஷனைப் பழிப்பவர்களின் உரையிற் பொருளில்லை என்று மறுத்ததால் நாம் அதனை ஏற்றுக்கொண்டாடுகின்றோமென எண்ணவேண்டா. கமிஷன் வந்தாலென்ன, வாராமற்போனாலென்ன? இந்தியர் கூடக் கலந்தாலென்ன, அத்தனைபேரும் இந்தியர்களாகவே இருந்தால்தான் என்ன? என்ன செய்யப்போகின்றது அது? என்ன அது செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கின்றார்கள்? அதனால் யாருடைய ஆன்மசுகத்தைக் கெடுக்கஇயலும். யாருடைய ஆன்ம வேதனையைப் போக்க இயலும். அக்கமிஷனின் விசாரணையின் முடிவாக இந்தியருக்கு இதுவரையில் கொடுத்திருந்த உரிமையும் (அது யாதோ ஈசனுக்கே வெளிச்சம்) போய்விட்டதென்று வைத்துக்கொள்வோம். அதனோடு உமக்கும் எமக்கும் இருக்கின்ற சுகம் என்ன போய்விடுகின்றது? உமக்கும் எமக்கும் என்ன துன்பம் அதிகமாகி வருகின்றது? சற்று யோசித்துப் பொருளொடு புணர்ந்த சொற்களால் பதிற் சொன்னால் நலம். அல்லது நமக்குச் சகல சட்ட சுதந்தரங்களும் வந்து விடுகின்றதென்று வைத்துக்கொள்வோம். என்ன பெற்றோம்? இங்கிலாந்தில் நடைபெறுகின்ற அரசியல் முறைதானே பெறவேண்டுமென்பது நம்மவர்க்குள்ள அவா! அதைப் பெற்றால் யார் வாழ்க்கை எவ்விதத்தில் மாறுதல் அடையும்.

இவ்விந்தியநாடு ஏழ்மையால் வாடுகின்ற தென்றும், கோடிக்கணக்கான ஜனங்கள் அரைவயிற்றிற்கும் சோறில்லாமற் சோர்கின்றன ரென்றும், வியாபாரம் கைத்தொழில் முதலிய பொருளீட்டும் சாதனங்கள் நமக்கெட்டாததால் இவ்வறுமை நேர்கின்றதென்றும், பெரும்பான்மை அதற்கும் அயல்நாட்டார் ஆட்சியே காரணம் என்றும், சட்ட உரிமை யாவும் இந்தியர் கையிலேயே இருக்குமாயின் இவ்வறுமைத்துன்பம் தீருமென்றும் சொல்வர். இவ்வுரையில், சுயமரியாதையைப் போலல்லாமல், சிறிது உண்மையிருக்கின்றது. ஆதலாற்றான் உற்றநோக்கி ஆராய்தல் வேண்டும்.

இந்தியாவின் வறுமை பரிவிற்கிடமாய தென்பது உண்மையே. இங்கிலாந்திற்கிருக்கும் ஆட்சி உரிமை இங்கிருந்தால் அந்நாட்டைப் போலவே இந்நாட்டிலும் செல்வம் கொழிக்குமென்பது உண்மையாயிருந்தாலு மிருக்கலாம். அதனால் எல்லாருக்கும் முழுவயிற்றுச் சோறு கிடைக்குமென்பது நிச்சயமில்லையே. இங்கிலாந்திலும் அதற்கீடான பிறநாடுகளிலும் கால்வயிற்றுச் சோற்றிற்கும் வழியற்றவர் கணக்கிறந்திருப்பதை அறியாதார் யார்! தாய் பசித்திருக்கத் தன்வயிறு இருமடங்குநிறப்பும் பாதகர் எங்குமுளர் இந்தச்சென்னைப்பட்டினத்தில் மாத்திரம் 'சினிமா' ஒன்றிற்குச் செலவாகின்ற பணத்தைக் கொண்டு அன்றன்று ஊரெங்கும் இஷ்டபோஜனம் செய்துவைக்கலாமே வேறு பெரும் வீண் செலவுகளைப்பற்றிப் பேசவும் வேண்டா. எந்த உரிமையில்லாததால் பிறரைப் பட்டினிகிடக்க விட்டு பலநாள் பார்த்த எச்சிலை தினந்தோறும்போய்ச்'சினிமாவில்' பார்த்து வருகின்றார்கள் சொல்லுங்கள்.

ஆட்சியுரிமை கிடைப்பதால் பணம் மிகக் காணலாமெனினும் அது வறுமையைப் போக்காது, சுகமும் விளைக்காது. ஆங்கிலப் பேரறிவாளர் தாமஸ் கார்லைல் உரைக்குப் பழுதுரைப்பார் இப்புவியில் இதுகாறும் கண்டிலம் அவரே பின்வருமாறு சொல்கின்றார்:—

> "இங்கிலாந்தில் இந்தக் கைத்தொழில் மிகுதியும் அதனால் கொழுத்த செல்வமும், இதுவரையில் யாரையும் பணக்காரராக்கியதில்லை. அந்தப்பணம் பெரும் மாயை. யாருக்கும் இன்னும் அது சொந்தமன்று. யாரையது பணக்காராராக்கியது என்று கேளுங்கள்? முன், நூறு ரூபாய்ச் செலவு செய்தவிடத்தில் இப்பொழுது ஆயிரம் ஆயிரமாய்ச் செலவு செய்யலாம், உண்மையே; ஆனால் அதைக் கொண்டு நல்லதொன்றும் நாம் வாங்க இயலாது. ஏழைகளாகட்டும் பணக்காரர்களாகட்டும், மேன்மையாய மிதச்செலவும் நிறைந்த பொருளும் உடையரா யிருக்கவில்லை. சோம்பேறிய சிற்றின்பமும் அற்பமாய குறைவும் சோர்வுமே மாறி மாறி அவ்விருவரிடத்தேயும் தோன்றக்காண்கிறோம். வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்களெல்லாம் இப்பொழுது நிறைந்திருக்கலாம். ஆனால் அவைகளுக்கிடையே நல்வாழ்வு வாழத்தான் மறந்துபோய் விட்டோம். இந்தச் செல்வமெல்லாம் ஜாலக் காட்சி. நம்மவரில் யாருமதை இன்னும் தீண்டவும் முடியாது. இச்செல்வத்தினால் வாஸ்தவத்தில் முன்னிலும்நன்மை பெற்றோம் என்ற உணர்ச்சி யாருக்காவது ஏற்பட்டிருந்தால்—நல்லது அவர்பேரையும் விலாசத்தையும் எமக்குச் சொல்லட்டும்."

காந்திமதி என்னும்
காந்தாரநாட்டுக் கட்டழகி.

(426-வது பக்கத் தொடர்ச்சி)

20. வாயிற் பழுத்த பேர்.

கோழி கூவுதற்கு நாழிகை ஒன்றிரண்டு இருக்கும் பொழுதே, பண்டு அவர் அறிந்த குரலொன்று காதருகில் கூப்பிடக் கருணாகரர் கண் விழித்தார். விழித்த கண்ணின்முன் உள்நிகழ்ந்த கனவின் சாரமாய கந்தனே எதிர் நிற்கவே, முதல் நாள் மாலை நிகழ்ந்தவை யாவும் அவரது நினைவிற்கு வந்தன. முடியின்றி, உடைவாளின்றி, நல்லுடையுமேயின்றி செங்கோலும் கரத்திலின்றி, முன்னெலாம் தன்பால் வளர்ந்த கந்தனாகவே கையில் தடியும் சிறப்பிலா உடையும் உடையோனாய் வஜ்ரதரத் தலைவன் தன்னெதிரில் நிற்பதால் கருணாகரர் ஓரளவு திகைப்படைந்து, "என்ன, கந்தா, பொழுது புலர்ந்து வெகுநேர மாயிற்றோ" என்று கேட்க, அவனும் அருகிருந்த விளக்கை நந்தினனாய், "ஆருயிர்த் தந்தாய், அப்பெயர் மாறாதே அழைத்ததற்கு மகிழ்கின்றேன். கந்தனே யான், பழைய உறவைப் புதுப்பிக்க வந்திருக்கின்றேன்; என் மனதினி லிருப்பதை வாய் திறந் தியம்பப் பணிப்பிரோ," எனக் கூறியவண்ணம் அவர் சயனத்துக் கால்மாட்டில் வந்தமர்ந்தான். காலிற்கருகே பெருங்குன்றத் தலைவன் இருப்பதற்குத் தரியாது கருணாகரர் எழுந்துவிட்டனர். உள்ளத்தை உழக்கிய எண்ணங்கள் பலவாயிருக்கக் கந்தனின் வாய்நின்று ஓர் வார்த்தை வரவில்லை. துவக்கும் வகையறியாமல் நெடுநேரம் சும்மா விருந்தான். கந்தனின் கருத்தை ஓரளவு ஊகித்த கருணாகரும் இவ்விடயம் எவ்வாறு முடியுமோ என்னும் கலக்கமெய்திச் சிந்தனையுள் ஆழ்ந்திருந்தார். எனினும் இருவரும் இவ்விதம் உட்கார்ந்திருப்பதன் தகுதியின்மையை நோக்கிய கருணாகரர் உரை யொன்றிரண்டு உருளுமா நினைத்து, "மகேந்திர மன்னவா, ஒன்றும் மொழியாத தென்னே! நின்மனத்தினுள்ளே வாயினை முழுக்கினாய்கொல்! நெருநல் மாலை என்னை நகை முகத்தால் வரவேற்காது நொதுமலாகப் பாவித்து நீ ஒழுகிய பாவத்தை எது செய்து தீர்க்கலாமென்று ஆய்ந்துழல்கின்றனையோ?" என விளையாட்டாய் வினவினர்.

"எந்தாய், என் செயல் பொறுப்பீர். அரியணையமர்ந்ததால் நும்மை நான் வரவேற்க வொண்ணாதென்றெண்ணியோ வாளா விருந்திருப்பேன். காரணம் வேறு. யான் கூறாது நீ ரதனை உணரக்கூடியவ ரல்லீர். பெருங்குன்ற மக்கள்பால் யான் இப்பொழுதே ஆட்சி வகிக்கின்றேன். அந்தக்காலை, பிறப்பிட மகன்றயான் ஏழையாய்ப் பலநாள் வளர்ந்த விடத்தைப் பாராட்ட என்னை முதுமையோர் மனங்கொள்ளார். அடியேன் வரலாறறிந்தவர்க்குப் பிறிதொன்று விளம்பவேண்டா."

"மகேந்திரா, உண்மையே. நீ முடிபுனையும் கடிநாளில் நான் விரைந்து வந்திருப்பதால் எனது நோக்கம் இரத்தலேயாய் இருத்தல் வேண்டுமென மதித்து நீ முகங்கொடா திருந்தனையோவெனச் சங்கை கொண்டு சிறிது மனமுளைந்தேன். பூதாரனே அங்கினையும் எனக்கு வழியில் தோன்றுவித்தான்."

"கருணாகரரே, நீர் காலந்தாழா திங்கடைந்ததுந் தெய்வச் செயலென்றே கொள்ளல் வேண்டும். இல்லையேல், இக்குன்றத்தில் யான் வகித்த செல்வமும் வாழ்வும் நீர் காண்பதற்கே நேராமற் போகலாம். பிற்றைநாள் என்கதி யாவதாருமோ! என்செல்வமும் செல்வாக்கும் எங்கேயோ! வல்லூறு வழியிழக்க அவ்வரி வேங்கைக் கொடிவந்து என் கொத்தளத்தில்..........." என்று சொல்லலாற்றாமல் வெதும்பிய கந்தனின் கண்களிற்றிரண்ட நீரைக் கருணாகரர் தன் முன்தானையால் துடைத்து, "வஜ்ரதரச் செல்வ, அவ்வண்ண மொன்றும் நிகழ்ந்திடாது. வருந்தல். வாளாப் புகுந்த இவ்வச்சத்திற் கிடந்தாராதே; தெய்வத்தினருள் நின்பால் தவறுவானேன்" என்று தேற்றினர்.

"மாந்தரினருளே வாய்க்காத எனக்குத் தெய்வத் திருவருள் சேர்வதெங்ஙனம்!" என விம்மினான் கந்தன்.

"மைந்த, மாந்தரால் நீ உற்ற இடருண்டோ? நின் கவற்சிக்குக் காரணமாயவர் யார்?"

"கருணாகரர்!"

"என்ன விளம்பினாய்! என்வயின் நீவைகிய அந்நாள் யானுரைத்த வன்சொல் ஒன்றிரண்டிற்கு உளைகின்றனையோ."

"எந்தாய், என்பால் நீரொன்று யாசிக்க வந்ததாயெண்ணினேனோ வெனச் சங்கை கொண்டீர். இக்காலம் இரவலன் யானாக இருக்கின்றேன். எனினும், இச்சகம் பல பேசப்பயின்றுளேனல்லேன். என் குறையே பெரியது. அக்குறைக்குரிய குறியோ அழகிது."

"கலங்கிய நெஞ்சத்தனாகி நீ கழறுமொழி குறிக்குமிடம் காணவில்லை."

"நும்மகள் காந்தி......" எனக் கந்தன் கருணாகரரது அருள் நோக்கிக் காத்திருந்தான்.

"எனது மகள் காந்திமதி நலமே இருக்கின்றாள்" என்று சேமம் உசாவுவார்க்குச் சிந்தனையற்றுக் கூறும் குரலில் கருணாகரர் பதிலளித்தார்.

"எவ்வயின், யாவர்பால், 'நும்மோ டவளுமேன் இங்குப் போந்திலள். காந்தாரநாட்டுக் கட்டழகி நுழைதற்கு வஜ்ரதரமாளிகை ஏற்றதன் றென்றோ!"

"மகேந்திரா, மலையூடடர்ந்த வனத்தே அவள் வருதற்கியலாது. நம்மரும் நகரத்தலைவர் சந்திரசேகரப் பிரபுவின் முயற்சியால் காந்தியை யோர் சீமாட்டியினாதரவில் அமர்த்தி வந்துளேன்."

"கருணாகரரே, வினவுதற்கு நாணுகின்றேன்—இருப்பினும் ஈதுரைப்பீர். நான் பொன்முடி தரித்து அரித்தவிசு அமர்ந்தநேரம் நேற்றுக் கன்னியர்தம் கண்கவரும் காட்சியா யிருந்ததோ?" என்று கேட்டானேனும் கந்தன் ஓராதிது உரைத்து விட்டானெனத் தன்னையே நொந்து கொண்டான்.

"கன்னியோ யான்! என்னை இது கேட்டு யாது பயன்?" எனக் கருணாகரர் நகைத்தனர்.

"கன்னியொருத்தியைப் பெற்றுள தந்தைக்கு ஈதியம்புத லருமையல்லவே"......கண்டிருந்தால் காந்தி, என்நினைப்பாள் என் செய்வாள், அஃதேனும் செப்புவீர்.'

கந்தனது கேள்வி இத்திசை நாடியதென்பது கருணாகரருக்குப் புதுமையன்று. இருப்பினும், அவன் வளர்க்கும் ஆசை முளைக்குமேல் விளையப் படாதென்று தேர்ந்து, ஒன்றும் உணராதவர்போல், "பகட்டிய பகட்டிற் கெல்லாம் ஈடுபடுவது மாதர்தம் இயல்பே. எனினும்

என்சிறுமி இதற்குப் புறநடை யாயினுள் என்பது நீ அறியாததுமன்று. சிறுவராய்ச் சிற்றில்கோலி உடன் விளையாடிய சினேகனுக்கு உண்டாய பெருமையும் சிறப்புங் கண்டு களிப்படைவாளே யன்றித் திக்கற்ற கந்தனினும் முடிபெற்ற மகேந்திரனை அதிகமாய் மதியாள்" என்று அவன் குணத்தைப் பொதுவாய்ப் பேசினுர்.

"பெருங்குணத்து அருந்தகையவள் நும்பெண். எனினும் அவளைப் பெற்றளித்த தந்தையீர், உலகவியலில் முதிர்ந்துளீர். செல்வத்தால் எய்தும் சிறப்பைச் செவ்விதாய் மதிக்கவல்லீர். நன்கனம் நினைத்து நடுவாய வாய்மையைச் செப்புவீராயின், குன்றெலாங் குவிந்து ஆண்டு குடியெலா மடிவணங்க என்னருங் கோப்பெருந் தேவியாக அவ்விதானத்தி னிழலில் காந்திமதி வீற்றிருக்கக் காண—நீர் யாதுகருதுவீர், உரைமின். இந்நலமனைத்தும் யான் நும்மகட்களிக்க விருக்கின்றேன். ஈவது விலக்குங் கொடுமையை நீ ரேற்று நிற்பதேனே!......எந்தாய்...

"கந்தா......" என்று எதிருரைக்க வாயெடுத்த கருணைகரர், "மகேந்திர வேந்தே" என மாற்றிக்கொண்டு, அதுவு மமையாதென்று, 'மைந்த' வென்றழைத்துப பேசப் புகுகையில் கந்தன் இடைதடுத்து "ஆமைய, கந்தனென்றே என்றனை எந்நாளு மழைத்திடுமின். காந்தியின் செவ்வாயுள் பழுத்துக் கனிந்த போது. காந்திக்குகந்த கந்தனுகவே இருக்கவிழைகின்றேன்—நும்மகளரசியாக நோற்றதில்லையோ செப்புவீர்" என்று வேண்டினுன்.

"உண்மையைச் செப்பினுல் சினமே கொள்வாய், மைந்த. புரசைவீதிச் சிறுகுடில் ஆட்சியே அவளுக்கு உரியதென நினைக்கின்றேன். எமக்குப் பிரஜையெல்லாம் தனபாக்கியம் ஒருத்தி போதும்."

"ஏழையேன் யானும் அச்சிறுகுடி லரசிற் கூடியிருந்தாலோ. தனியே இங்கு யான் அகங்கரைந்து உடல் குலைய விட்டுவிடுவீரோ?"

"மைந்தா - வார்த்தை - வார்த்தை - வார்த்தை. அர்த்த சூன்ய வீண் வார்த்தை! உன்னெரு பெருநிலையை உன்னிப்பார். அந்தணர்முன் என் மகளைமணக்கவோ நீ மாட்டாதவன். இடது கையிற்றனே தாரை வாங்குவாய். ஏழையே யாயினும் ஐய யான் இழிமகனல்லன். வேந்தற் கிசைந்த ஆசைக்கிழத்தியாய் அமைவதனிலும் பாகனுக்குற்ற பத்தினியே யாக என் குழந்தை வாழ நினைப்பேன். ஆகையால்......"

"வேதனே சடங்கு காட்ட வேதியர் அங்கி மூட்டி ஓதவே மறைகள் யாவும் உம்மகள் கரத்தைத் தந்து நாதமுமணியு மென்ன நண்ணுவி றென்ற சொல்லால் சீதநீர் அளிக்க வேற்பன் தெளியினும் மையம் ஐயா," எனக் கந்தன் இசைத்து நின்றனன்.

இவ்வுறுதி மொழிகளைக் கேட்ட கருணைகரர் மனம் சிறிது தளர்ந்த தெனினும் அரசின்பால் நாடவில்லை. எனவே காந்தியைக் கந்தனுக்குக் கொடாத காரணம் வேறொன்று தேடலாயினுர். ஒன்று தென்பட்டது. "மகேந்திரா, வரும் விஜயதசமி யன்றையதினம், நின் பெருங்குன்றிற்காக, வஜ்ரதர குலத்திஞெரு கீர்த்திக்காக, நின் முன்னையோர் ஆக்கிய இச் செல்வம்நிலைத்தற்காகக் காலமாருதனுடன் தனிப் பெரும் போரொன்று புரிதற்குள்ளாய். அன்னதற்கு ஆயத்தமாவதனில் நின் மந்திரி பிரதானி பிரஜைகள் அனைவரும் கண்ணுங் கருத்துமாயிருக்க நீ கடிமணம் நாடித் திரிவது அழகாமோ! அதுவன்றி, வஜ்ரதரத் தலைவன் என்போன்ற ஏழைத் தொழிலாளியிடம் பெண் கொள்ள அவர்தாம் ஒருநாளும் ஒவ்வார். உன் பிறப்பும் நீ என்பால் வந்துற்று வைக நேர்ந்ததும் மறவாதொருகால் மறுமுறை எண்ணிப் பின் இக்கருமம் துணிக. நீயோ சிறுவன். வேந்தனுயினும் உன் நாட்டினேர் நட்பின்றி ஆட்சி செலுத்துதலருமை. இதுகாறும் நின்பால் அவர் கொண்டிருந்த வெறுப்பு மறைதற் கொத்ததாகிய இவ்வமயம் மறுபடி அவர் பகைக்கு ஆளாக நினைத்தல் அறிவன்று," என்று கருணைகரர் கூறினுர்.

"கருணைகரரே, அந்தப்பயம் வேண்டா. என் குடிமக்களும் பிரதானிகளும் எத்தகைய ரென்பதை நன்குணர்வேன். இக்கன்னிப்போரில் பகைவென்று விடுவேனேல் - கட்டழகி உள்ளியங்கக் கைதளரப் பொருவேனே - பரிஜனங்களும் பிரஜைகளும் பின் என்பால் கொள்ளுமன்பிற்கு அளவிராது. எனது சித்தமே தமது பாக்கியமாக் கருதி விறலியை யான் மணந்தாலும் வள்ளிக்கு வாய்த்த மனோர னென்றே கொண்டாடுவார்."

"கன்னிப்போர் வென்றிடினும் கந்தா, நீ, என்மகளை யொருநாளும் மன்றல் கண்டிடாய். செந்நீரும் போர்க்களமும் அவள் சிந்தைக்கு ஒவ்வாவென்பதை அறிந்தவனன்றோ நீ. புகழ்நாடிப் போர்முனை விட்டகலா வாழ்க்கையுடைய வீரருக்கு ஏற்ற துணை யாவாளோ என் புதல்வி! வேண்டா, மைந்தா, குன்றக் குறவர் குலத்திலே நினக்கியன்ற மணுட்டியைத் தேடிக்கொள். நீயோ, இளையன் அழகன் செல்வன் வலியன், ஆதலால் எவர்பாலும் மணம்வினவி வாயிழவாய். வீரபத்தினி படைப்பாயாயின் அவள் நினது வெற்றியைப் போற்றித் தோல்வியில் தேற்ற வல்லளாவள். காந்தியோ தன் நாயகன் போரினில் பெற்ற வெற்றிக்கும் வாடித் தோல்வியில் தவிப்பாள்... ..ஆதலால்......"

"ஆயின், யான் வேண்ட வேண்ட வெறுத்தென்னை அப்பால் தள்ளுகின்றீர்!"

"மஹேந்திரா, வெறுத்துன்னைத் தள்ள நான் வல்லேனல்லேன். என்மே லக்குற்றம் ஏனேற்றுகின்றுய். இங்கு யான் தனியாய் முற்றிலும் உன் வசத்திலிருப்பதால் என்னை நீ கொன்றாலும் கேட்பாரில்லை - இருப்பினும் ஈதுணர்ந்துகொள். என் வாய்வந்த அனுமதியால் காந்திமதி என்வரினும் சமநிலையிலன்றி மணம் புரியாள்."

"ஐயகோ! அந்தத்தில் யான் கிளி காத்த இலவுதானுகவோ, பாவியேன்! புகழொடு வாழவும் போரினில் வெல்லவும் எனக்கினியோ ரூக்கமற இச்சுடுசொல் சாற்றி விட்டீர்......என்செய்வேன் தெய்வமே," என்று கந்தன் கவன்றுழலுவானுயினுன். கருணைகரர் திடசித்த முடையவராயினும் இளகிய நெஞ்சுடையவராதலால் அவர் கண்களிலும் நீர் கசிந்தது. குன்றுளுமித் தோன்றல் கொண்டவிக் காதலுக்கிணங்கித் தன்மகளைக் கொடுப்பினும் அமையுமென வொருபோது எண்ணினுர். எனினும், பின்னடக்கும் போரிலே இவன் தன்னுயிர் காத்து மீளல் அரிதென்று சங்கையுற்றுச் சிறிது நின்றுர். "இம்மன்றலிற்குத் தான் ஒப்பியதாக இப்பொழுது சொன்னுலும் என்! கந்தனின் பகையும் கொள்ளேன். மற்றென் கொள்கையும் பழுதாகாமல் பின்னுள் காந்தியைக் கலாநாதனிற்கே உரிமையு மாக்கிவிடலாம்......" என்று இந்தமுறை கருணைகரர் சிந்தித்துக்கொண் டிருந்தபோது, கந்தன் அவரது தோள்களை தனதிரு கரங்களால் மெல்ல அசைத்தனனுய், "எந்தாய், கேள். அரிய இரகசியமொன்று நும்பால் நானிச் சமயம் சொல்ல விருக்கின்றேன். இவ்வற்றம் காவாது நான் கழறிவிடல் தகுதியன்றென்ப துணர்வேன். என் பெருமைக்கோ ரிழுக்காம் அது. ஆயினும் விதி

வந்து வாயுளே உந்தவே சொல்லப்படா இச்சொல் சொல்பவனுகின்றேன். இந்த இரகசியம் நும்வயின் அடைக்கலம். இதனில் எழுத்தொன்று பிறரறியாமற் காக்க வேண்டியது நும்கடன். பெருங்குன்றம் காந்தாரம் எந்தக் கோடியில் நீர் இதைப்பற்றி அயலறியப் பேசினுலும் கேட்பதற்கு எனக்கோர் காது அங்கங்கு உளது. வைத்த நம்பிக்கையை விற்றுவிட்ட துரோகியின் மார்பிலே பாய்வதற்கு என்கையிற் கத்தியும் உண்டு. நாகாக்க மறந்தீராயின் பின்னுமது உயிரோடே எனக்கு உத்தரம் சொல்ல வேண்டும்......இயம்பவோ..." எனச் சிறிது நெட்டுயிர்ப்பு வீங்கிய நேரத்தினிடையே கருணைகரர், "ஆயின் இவ்வளவு கொடுமையான இரகசியத்தை எனக்குச் சொல்லவேண்டா. உடையவன் உதடு தாண்டிய பின் இரகசியம் ஒருபோதும் தரியாது. என்னுயிரையே ஈடுவைத்து உனது அந்தரங்க வார்த்தைக்குப் பாத்திரனுக வேண்டுமெனும் அவசியமும் எனக்கில்லை." என்று தன் தோள்மீதிருந்த கந்தனின் கைகளை மெல்லவே அகற்றிவிட்டார்.

"கருணைகரரே, வரவிருக்கும் தனிப் போரிற்கு அஞ்சுகின்றேன். போர்க்குரிய வீரம் என்பாலில்லை. மாள்வேனே போரிலென்று மாழ்குகின்றேன். சொல்லிவிட்டேன். என் பிரஜைகள் ஈதறிந்தால் பகைவர் கையால் நான் விழும்வரையில் காத்திரார். அவர்களே என்னைக் கொன்று எழுகடல்களுக்கப்பால் வீசித் தள்ளுவர்......இவ்வுரையால் எனது ஆவியும் மானமும் அந்நியன் வசமாயிற்று."

வாயினின்று வார்த்தை வெளிவந்ததும் அவ்விளவலின் உடலம் பதைத்தது. இரக்கமோ டவனைக் கருணைகரர் தன் மார்புறத் தழுவிக் கொண்டார். இருவர் கண் பெருகுநீரும் அருவியாய்ப் பாய்ந்தது. "மைந்தா, மகேந்திரா, மெய்பதருய். மொழிந்த இவ்விழிதகைச் செய்தியை மறுத்திடு. நின்னிலும் நின்னை யான் நன்கறிவேன். முற்றுத இளையவன் நீ. போர்முனை யுற்ற பயிற்சி பலகால் பெற்றவர்க்குரிய வீரம் நினக்கு இதுகாறும் வாய்க்காதது குறையாமோ! கந்தா, பிறனெருவன் நின்னை அமர்க்கோழை என்றழைக்கப் பொறுத்திரேன் நான். அமரஞ்சுவா னல்லன் நீ. அற்ப காரணத்திற் கெல்லாம் தீப்பறக்க நீ சினந்து கண்டுளேன் பழக்கமின்மையால் நீ இவ்வாறு பயம் கொண்டனை. நாடோறும் இன்று முதல் படைப்பயிற்சி விலங்கு வேட்டை முதலிய செய்து வருவாயாயின் விஜயதசமிக்குள் நின் வீரம் முதிர்ந்து விடும்" எனத் தேறுதலுடன் போதனையும் செய்தனர் கருணைகரர்.

"பாழ்படு மிப்பயிற்சிக்கோ இன்றைக்கும் விஜயதசமிக்கும் இடை நின்ற பொழுது போதாதே. அற்றை நாள் நினைக்குங்கால் என்னகம் குலைகின்றது. சீயமெனச் சீறிச் சிலவீரர் - ஐயோ, கோழையேன் என்னைத்தவிர - குன்றினின் றிறங்கிச் சென்று, பார்ப்பவர் களித்துத் தூண்ட விச்வகேசரியின் முன்னிலையில், இரக்க மில்லாப் போர் புரிந்து கையொடியத் தலைசிதறி மடியத்தான் காணவோ யான் பிறந்தேன் பாவியேன். பிழைக்க வழி பிறிதில்லையோ! நீதியோ, நேர்மையோ, தருமந்தானே, நீர் சொல்லும்......" எனக் கழறிக் கந்தன் ஓய்ந்தான்.

இருவரும் சிறிதுபோது எதும் இயம்பிலர். "எந்தாய்," என மீண்டும் வாயெடுத்த கந்தனை இடைவிலக்கிக் கருணைகரர்,

"மைந்தா, நின்னிலை காண வென்மனம் குழைகின்றது. வஜ்ரதரமரபிலே, குன்றெனக்குவவுந் தோட் குலிசப்பேர் அண்ணலுக்குப் பிள்ளையாகிப் போர்முனை அவாவும் தீர வீரத் திண்மையோரைப் படையுள் படைத்து நிற்கும் நீ, போரஞ்சிப் புறங்கொடுக்கும் மக்கட் பதடியென மதித்து நினக்கே உரிமையாய சேவகத்தை மறக்க நேர்ந்ததும் என்ன விதி வசமோ, யார் தான் இட்ட சாபமோ! சட்டை தட்டிக் கொக்கரித்து விலக்கினும் விலகாது அமர்கருதும் வாரணத்திற்குள்ள வீரம் நினக்கில்லை என்னுமிது நம்புதற்கொத்ததோ?... எனின் மைந்த, ஒன்றுன்னைக் கேட்டறிய என் நா எழுகின்றது. இச்சண்டையிற்றன் கை கலக்கும் ஆற்றல் முற்றிலும் அற்றுளனுகக் கருதும் நீ, உன்னுடன் அரியாதனம் வீற்றிருந்து ஆட்சி செலுத்த என்னரு மகளை வேண்டியது இறும்பூதாயது. நின் அரசும் ஆட்சியும் நிலைப்பதுவும் இப்போரில் நீ பிழைத்த பிறகன்றே!" என வினவினுர்.

"கருணைகரரே, காதலின் வன்மையை எந்நாளும் நீவிர் அறிந்ததில்லையோ, மறந்துதான் போயினீரோ! இவ்வனிதையின் நயனக்கடையருள் எனக்கு வாய்க்குமேல் போரிற் பின்னெனக்கு நிகர் யார்! குஞ்சரம் பொழி மதசல மளையவொரு சீயமெனப் பகைப்படை யுழக்கிக் குருதி நீராடுமொரு தீரனுவேன். காந்தியின் பார்வைபோல் கூர்மையாய் என் வாள் பிளக்கும். அன்னுள் நினைவே என் மார்க்கவசம். அவள் திருநாம மந்திரமே எனக்கரிய காப்பாகும். வெற்றிதரும் பரிசி லவளென்றால் வெல்லலெனை வேறெவர்க்கு மாகாது. தந்தையே, விஜயதசமித் தனிப்போ ரென்றால் பின்னவளைத் தருகின்றே னென்றேனும் வாக்களிமின். பிறகு, அந்தக் கொடுங்கால் நெடுங்கைக் கன்மனக் கம்பியன் என்னின் மிக்க ஊக்கமுடன் சமர் புரிய எந்நாள் சென்றுளன் எனச் செப்புவீர்."

"கந்தா, இதுவென்ன மதியீனம். உனது மானமும் மரபும் பெருமையும் நாடும் சுற்றமும் நின்பால் வீரநோக்கம் வைத்துந்தப் போதாவோ! புரிகுழ லொருத்தியை முன்னிட்டோ போர்புரியச் செல்லல் வேண்டும்."

"தந்தையே, என்மனைத் திருவாகக் கட்டழகிக் காந்தியை இனிப்பெறுவதற் கில்லையேல் இதுகாறும் என்பால் எய்தியுள நலங்கள் யாவும் எனக்கொரு பொருளல. மேல் வருவதற்கொன்று இலதாயில் இருப்பன செல்வமெல்லாம் யாவரும் இகழ்வர். பிறைபுரை யவள் நுத லென்ன வென்கைத்தனுவுங் குனிக்குமா கற்பேன். என்வெற்றியம் பதாகையாக அவ்வஞ்சியனையாள் படிவமே அசைந்தழைக்க அஞ்சாது பின்செல்வேன். கொடுத்தனன் அவளை என்றுரைத்துக் கொற்றமே எனக்கு ஆக்கிவைக்க உலோவுகின்றீர்."

வஜ்ரதர வள்ளலே தன்பால் வரம்வேண்டக் 'கொடேன்' எனச் சொல்வதற்குக் கருணைகரர் வாய் எழவில்லை. சற்று யோசித்தார், "தலைவ, விஜயதசமி வந்தகன்றபின் இதற்குயான் உத்தரம் தந்தாலோ?" என வினவினுர்.

"பின், உத்தரம் ஏற்க யான் உயிருடன் இரேனென்னும் சூழ்ச்சியால் இன்னவாறு காலங் குறிக்கின்றீர் போலும். ஆயின்.........என்......இக்கடும்போர் என்னுயிர்க்கும் உம்விடைக்கும் இடைநிற்காவண்ணம் உபாயம் ஒன்று உளது. நான் தரித்த இம்முடியின் சுமையினுலன்றோ விச்வகேசரி வேந்தனின் ஆணைக்கு ஆளாக வேண்டியவனுகின்றேன்! இத்திருவெலாந் தொலைக. இம்மலையின் புழுதியை என் காலின்றுதறி முடியையும் கழற்றி அவன் காற்கீழெறிந்து உம்மோ டேழையாய் வந்துவிடுகின்றேன். ஆயின் இன்றே எனை ஆட்கொண்டு காந்தியைக் கொடுப்பீரோ?"

“என்ன கந்தா, மறுபடியும் தரியோட்டவா நினைத்தனை. விடதர்தம் கோமான் சரித்திரமே இதற்குத்தோற்றது, போ! வேண்டா, வேண்டா, புன்தொழில் புரிதற் கேற்றவன்று நின்கரங்கள்—இனி, என்பாவின் இழைகளை நீ பிய்த்தழிக்க இடங்கொடேன்.”

“கருணாகரரே, என்நிலை கண்டும், சித்திரம்பேசிச் சிரிப்பூட்ட உமக்கு மனம் வருமாயின்......நல்லது...... க்கைத்தொழில் யான் கற்காவிடின் என்! கணக்கற்ற பொருள்கொண்டு வருகின்றேன். போரஞ்சிப் பேரையும் பிறப்பையும் கைவிட்ட கயவனென்றெனை வசைகூறுவர். ஆயினும் என்! குருதி சிந்தும் கொடுங்கள மொழிந்து விருந்தோம்பி இல்வாழும் வாழ்க்கை காந்திக்குப் பெரிதும் உகந்ததா யிருக்குமன்றே! அதுபோதும் காந்தியும் நானுங் கைகோத்து நின்று தயாபர சுவாமிகளிடம் அறநெறி அறிவுபெற் றுய்வோம். பிறந்ததால் உற்ற பயன் அன்றே பெற்றேன். எனது மெய்க்காதல் பயக்கும் நலம்யாவும் அவ்வுத்தமி அனுபவிக்க, எமைப் பயந்த தந்தாய், கங்குல் பகலற உம்மை எங்குல தெய்வமாகக் கொண்டாடி ஆதரித்து மகிழ்வோம்—வேண்டா வெறுப் பாய்ப் பெண்டாட்டி கொள்ளும் அவ்வூதுலைக் கம்மியன்........”

“நில், நில், கந்தா. இதனுடன் நின்னுரை போதும். இச் சிறு விளக்குஞ் சுடர் மங்குகின்றது. அணையுமுன்னாமும் உரைமுடிப்போம். உண்மையை ஒளியாது உரைத்தலே நலம். ஆதலால் சுருக்கமாக மொழிந்து விடுகின்றேன். அதனால் உனக்கு வெகுளியும் வருத்தமும் விளைந்திடினும் விளைக. காந்தியை யான் வாக்கினால் வேறொருவற்களித் தனேன். அந்நங்கையை நச்சி நீ நோவதிற் பயனில்லை. நீ பகைக்கினும், எமது மதிப்பிற்குப் பாத்திரனாய கம்மியச் செல்வன் கலாகாதனிற்கே அவள் உரியவள். இனி வீணாசை விட்டு நீ யுன் வழி நடப்பாய்.”

விளக்கின் சுடரொளி உன்மத்தன் எனமருளும் கந்தனின் முகத்தைத் தெரியக்காட்டி அணைந்து போயிற்று. பெருங்குன்றச் சிறுவனுடன் தன்னுயிர்க்கே இருளிடத்தில் மன்றாட நேர்ந்ததோ எனப் பயந்தார் கருணாகரர். ஆனால், கந்தனோ மெலிந்த குரலில், ‘ஆயின், போகின்றேன். மான் ஊட்டிய மகனோடு எம் வஜ்ரதா வமிசம் அழிந்துபோம் என்னுஞ் சொல் இன்று அவனை வளர்த்துத் தந்த கருணாகரரால் நிறைவேறுகின்றது’’ எனச் சொல்லிய வாங்கே அச் சிறுகுடில் விட்டகலக் கருணாகரர் அவனுருவம் நிலவூடு முழுகக் கண்டார்.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பநர்.

பொருள் ஆராய்ச்சி.

அன்பு ஆராய்ச்சி

[428-ம் பக்கத் தொடர்ச்சி]

அன்பின் அருநிலை.

அன்பின் அறிகுறி:—இனி இவ்வன்பினை எவ்வாறு அறிவது? அன்போ ‘கண்டு கேட்டுண்டு உயிர்த்து உற்று’ அறியலாகாப் பொருள் ஆகலான் உள்ளத்தால்தான் உய்த்துணர இயலும். புகைகண்ட இடத்தில் நெருப்புண்டு என்று உய்த்துணர்தல்போல அழுது புலம்புமிடத்தில் அன்பு உண்டென்று உய்த்துணரலாம் என்பர் ஒருசாரார். “அன்பென்பது அருட்கு முதலாகி மனத்தின் நிகழும் நேயம்; அஃதுடையார்க்குப் பிறர்கண் துன்பங் கண்டவழிக் கண்ணீர் விழுமாகலின் அவ்வருணானே அன்புடைமை விளங்கும் என்பது ” என்றார் பேராசிரியர்.

அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்.

அன்பானது கங்குகரையின்றிப் பெருக்கெடுத்தோடும் பெருங்கடல். அதனை அறையிற் பூட்டித் தாழ்ப்பாளிட்டு அடைத்து வைப்பார் யார்? அன்பர்க்குச் சிறிது துன்பம் வரினும் கண்ணில் தண்ணீர் கலங்குகின்றது. அதுகண்டு அவரது அன்பினை அறியலாகாதா? ஆகும். ஆனால் கண்ணீரினை அன்பிலாரிடத்தும் காண்கின்றோம். கூத்துமேடையில் ஆடுவோனும் அழுது புலம்புகின்றான். அதனால் அவனிடத்தில் அன்பு உண்டு என்று உய்த்துணரலாகுமோ? ஒருக்காலும் ஆகாது. அன்புள்ள இடத்தில் கண்ணீரைக் காணலாம். கண்ணீர் கண்ட இடத்தில் எல்லாம், அன்பு உண்டு என்று உறுதியாகச் சொல்ல ஒண்ணாது. புகையுள்ள இடத்திலெல்லாம் நெருப்புண்டு. ஆனால் நெருப்புள்ள இடத்திலெல்லாம் புகையுண்டோ? பழுக்கக் காய்ச்சிய இரும்பில் புகையுண்டோ? அஃதேபோல உலகத்தினை மயக்கவேண்டி அன்பினைப் போன்று வெளிக்குக் காட்டிக் கொள்ளுகின்றவர்கள் இடத்தில் அழுத கண்ணீரைக் கண்டாலும், அன்பென்பது என்னளவும் இல்லை எனலாம். ஆகையால் இவ்வாராய்ச்சியால் பயன் என்ன? கண்ணீரை எங்குக் காணலாம் என்றறிந்து எமக்கு என்ன பயன். அன்பினை எந்தவிடத்தில் கண்டறியலாம் என்பதல்லவா எமது நாட்டம்.

சாவிற் சாதல்:—சாவிற் சாதல், நோவினோதல், பிரிவு நனி இரங்கல், முதலிய கண்டவிடத்து அன்பு உண்டென்று அறியலாம் என்பர் மற்றொரு சாரார். இவையும் திரிவுடைய என்கின்றார் நக்கீரர். சாவிற் சாதல் அன்பொன்றினாலேயே ஆவதில்லை. அகமுடையான் இறந்த உடனேயே ஊரார்க்கு அஞ்சி உடன்கட்டை ஏறலாம். தான் கேட்டறிந்த நூல்கள் கூறுவதுபோல விண்ணுலக மேலான இன்பம் துய்க்கவேண்டி இறந்தாலும் இறக்கலாம்.

அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
தாமாய்ந் தனரே குடைதுளங் கினவே
உரைசால் சிறப்பின் முரசொழிந் தனவே
பண்ணா றடுக்கிய வேறுபடு பஞ்சவம்
இடங்கெட ஈண்டிய வியன்கட் பாசறைக்
களங்கொளற் குரியோர் இன்றித் தெறுவர
உடன்வீழ்ந் தன்றா லமரே பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி ஆங்கமைந் தனரே
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவி னோரு மாற்ற
அரும்பெறலுலகம் நிறைய
விருந்து பெற்றனரால் பொலிகநும் புகழே.

என்று கழாத்தலையார் எனும் புலவர் இறந்த பெண்கள் இமையோராதலைப் புகழ்வர். நிலையான புகழுடல் வேண்டி நிலையிலா இப்பொய்யுடலை விட்டாலும் விடலாம். கொழுநன் இறந்தபின் கொழுகொம் பற்ற கொடியைப்போலக் கைம்மை நோன்பு நோற்று, வாடி வதங்கி மிதிபடுவானேன் என்று உயிரை விட்டாலும் விடலாம்.

பல்சான் றீரே பல்சான் றீரே
செல்க எனச் சொல்லாது ஒழிகஎன விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளா நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி ஆகப்
பரல்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவல் பெண்டிரேம் அல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கரிது ஆகுக தில்ல எமக்குஎம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்பு அற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயும் ஓரற்றே.

என்று பூதப்பாண்டியன் பெருங்கோப் பெண்டு பாடியதைக் காண்க.

அல்லது அன்பினாலே உயிர் விட்டாலும் விடலாம்.

ஒருயி ராக உணர்க உடன்கலந்தார்க்(கு)
ஈருயிர் என்பர் இடைதெரியார்—போரில்
விடனேந்தும் வேலோற்கும் வெள்வளையி னாட்கும்
உடனே உலந்த(து) உயிர்.

இதனை மூதானந்தம் எனப்போற்றுவர் புறப்பொருள் வெண்பாமாலை பாடியருளிய ஐயனார் இதனார். இவ்வாறே நோவினோதலும் திரிவுடையதாகும். மணாளன் நோவது கண்டும் பிரிவது கண்டும், பிறர் எல்லாம் தன்னைப் புகழவோ அல்லது அவன் மெச்சவோ மனாட்டியும் அழுது புலம்பலாம். இவ்வெளி மயக்கிற்கு இவ்வுலகிலே அளவு ஏது? நக்கீரனாரும் “அன்புடையரான குணங்கண்ட இடத்து இவை உண்மையான் ஈங்கு அன்புண்டென்று அனுமித்துக் கொள்ளற் பாற்று. அன்புடையரான குணம் யாவையோ எனின் சாவிற் சாதல் நோவினோதல் ஒண்பொருள் கொடுத்தல், நன்கு இனிது மொழிதல், புணர்வு நனிவேட்டல், பிரிவு நனி இரங்கல் என இவை. என்றார்க்கு, இவை திரிபுடைய: என்னை, இவை திரிவுடைய வாறெனின், சாவிற் சாதல் என்பது அன்பினானே நிகழ்வதன்று. பிணியுடையளாய் வாழ்க்கையை முனிந்து செல்வாள் இது தலைக்கீடாகச் சாவல் என்று சாவவும் பெறும். இனிக் “கண்டீர் அன்றே குடுமிக் கூந்தலில் நறுநெய் பெய்து கொண்டானிற் பின்னையும் இருந்து சோறுதின்று வாழ்கின்றாள். ஓ! கொடியளே காண்” என்று நித்தல் பழிதூற்றப் பட்டிருந்து பின்னுமே ஒருநாட்சாவன், அதனான் இன்றே சாவன் எனச் சாவவும் பெறும்; அதுவன்றிப் புகழ்வேண்டிச் சாவவும் பெறும்; கணவனொடு செத்தார் சுவர்க்கம் புகுவர் என்னும் உரைகேட்டு அது வேட்கையானும் சாம்; அப்பரிசன்றி அன்பினானும் சாம். அஃது ஒரு தலையாக நிகழ்வதன்று என்பது. இனி நோவின் நோதல் என்பது இன்ன நோவென்றறியலாகாது. அதுவும் திரிபுடைத்து. அன்பின் வழியும் அன்பில் வழியும் தோன்றுமென்று மறுக்கப்படும்; ஒண்பொருள் கொடுத்தல் என்பது கணிகையர் கூட்டம் பொருளான் ஆம். ஆதலின் அதுவும் அன்பன்று. நன்கினிது மொழிதல் என்பது நன்கினிது சொல்லிப் பகைவரும் தம் கருமம் முடிப்பாராதலின் அதுவும் அன்பன்று. புணர்வு நனி வேட்ட லென்பது அச்சம் காரணத்தாலும் புணர்வு வேட்டார்போலப் புணர்வர். பிரிவுநனி இரங்கல்என்பது நீரும் ஆடார் பூவும் சூடார் சாந்தும் அணியாராய்ப் பிரிந்திருந்தார்போல வாடியிருப்பர் அன்பிலாதாரும் ஆகலின் அதுவும் திரிபுடைத்து” என்று கூறுதல் காண்க.

அன்பின் வடிவம்:—ஆனால் நக்கீரர் மேற்சென்று ஒன்று கூறுவர். காதலன் எங்ஙனம் இறந்தானோ அங்ஙனமே காதலியும் இறப்பின் அங்கு அன்பு உண்டெனலாம். காதலனுக்கு என்னநோய் வந்ததோ அந்தநோயே காதலிக்கும் அப்போதே வருமானால் அங்கும் அன்புண்டு எனலாம். இங்குத்தான் அன்பு என்பதன் உண்மை உருவம் ஒருசிறிது புலனாகின்றது. நக்கீரனாரே தமது வாயாற் கூறட்டும்.

“இனித் திரிவின்றி இக்குணங்கள் நிகழ்ந்தவழி அன்புண்டெனக் கொள்க. அஃதெங்ஙனம் நிகழுமெனின் அவன் இறந்துபட்டவாறே தானும் இறந்துபட்டவழி அன்பினானே ஆயிற்று எனக் கொள்க. அல்லாதனவும் இவ்வகையால் திரிவில்லன அன்பினானே ஆயிற்றெனக் கொள்க’ என்கின்றார்.

சுரைக்காய் அடிகளும் நமது பாட்டியும்:— இத்தகைய அன்பு உலகில் இல்லை என்பது ஓர் தடையாகாது. இறைவனுருவாகிய இவ்வன்பு அருமையாகத்தான் இருக்கும். ஆனால் அடியோடு இல்லை என்று சொல்லிவிட முடியாது. சுரைக்காய் அடிகள் என்ற பெரியாரைப்பற்றிய கதை ஒன்றுவழங்கிவருகிறது. அவருக்கு வழிபாடியற்றி வந்த ஒரு அடியவர் தொலைதூரம் போயிருந்தார்: போன இடத்தில் ஒருநாள் மரமொன்றில் பழம்பறிக்க ஏறினார். அவரது பொல்லாத காலத்தின் பயனாகக் கால்தவறிக் கீழேவிழுந்தார். மண்டையில் அடிபட்டது. அதே போதில் சுரைக்காய் அடிகள் பலருடன் பேசி இருந்தவர் தமக்குத் தான் மண்டை உடைபட்டது போலச் சடுக்கெனத் தமது தலையைப் பிடித்துக் கொண்டார். அண்டையிலிருந்தவர்கள் கேட்டதற்குக் கண்காணா ஊரில் நிகழ்ந்ததை எல்லாம் எடுத்துரைத்தாராம். ஈதெல்லாம் காற்று மூட்டையாக முடிந்தாலும் முடியலாம். அந்தணர்கள் என்று நாம் முன் சிறப்பித்துக்கூறிய பெரியோர்கள் இவ்வன்புருவோடு கடவுட்டன்மை பெற்று நின்றவர்கள் ஆதலின் அவர்களிடத்தில் இவ்வன்பொழுக்கத்தினைக் கண்கூடாகக் காணுதல் கூடும். நடத்தையில் இவ்வன்பொழுக்கம் இவ்வூரில் இப்போது இல்லாமற் போனாலும் பேச்சிலாவது இருந்து கொண்டுதான் வருகிறது. புத்தம் புதிதாகத் திருமணம் செய்துவந்த மாப்பிள்ளையும் மணமகளும் வாழும் வீட்டில் என்ன பேச்சு வருகிறதென்று மறைந்திருந்து பார்ப்போம். அவ்விருவரும் பிறரையும் உலகையும் மறந்து ஒத்த மனதுடன் கொஞ்சிக் குலாவி வாழ்கின்றனர். அதைக்கண்ட ஓர் தள்ளாத பாட்டி தன்னை யவர்கள் புறக்கணிப்பதாக எண்ணி வருந்துகிறாள். புறங்கூறத் தொடங்குகிறாள். “என்ன அம்மா இப்படியும் உலகம் இருக்குமா? ஊட்டி வளர்த்து எவ்வளவோ பாடுபட்ட நம்மை எல்லாம் ஏன் என்றுதான் கேட்கின்றானா? எங்கோ கிடந்த அந்தச் சிறுக்கி மேலேயே எப்போதும் உயிரை விட்டு விடுகின்றான். அவளுக்குத் தலைநோய் வந்தால் இவனுக்குந் தலைநோய் வந்து விடுகிறதே” என்று மேலும் மேலும் பேசிக் கொண்டே போகின்றாள். நமக்கு வேண்டியது வெளிவந்து விட்டதால் நாம் இனி அங்

கிருக்கவேண்டாமே. அவளுக்குத் தலைநோய் வந்தால் இவனுக்குந் தலைநோய் வருவதுதான் அன்பொழுக்கம். இவ்வாறு வாயளவிலாவது பேசிக்கொள்வது தமிழ் நாட்டில்தான். இஃது ஒன்றே அன்பென்பது தமிழரது தலைமுறையாக வரும் பழம் பொருள் என்பதை விளக்கும்.

ஈருடலும் ஒருடலே:-அன்பொழுக்கத்தில் ஓர் உயிர் ஈருடல் என்பதோடு நிற்பதில்லை. ஈருடலும் ஒருடலாகின்றது எனலாம். உடலின் ஓர் உறுப்பிலே நஞ்சு உட்புகுமானால் அது மற்றைய உறுப்புக்களிலும் புகுந்து பாய்ந்து முற்றும் பாவுகின்றது. அதேபோல அன்பு நிலையில் நின்றவர்களது உடல்களும் ஒன்றேயாக ஒருவர்க்கு நிகழ்ந்தது மற்றவர்க்கும் நிகழ்கின்றது. ஒருவருக்கு நோய்வரின் அந்நோய் அப்போதே மற்றையவர்க்கும் வருகிறது. ஒருவர் தம்மை நினைத்தால் தமக்குத் தும்மல் வரும் என்று ஒரு குருட்டு நம்பிக்கை வழங்கி வருகிறது. இதனை அழகுபட விளக்குகின்றார் திருவள்ளுவனார். காதலனும் காதலியும் ஊடி இருக்கின்ற நிலையில் காதலனுக்குத் தும்மல் வரவே அடக்க முடியாது தும்மினான். தும்மலிலேயே உயிர்போய் விடுகின்றதோ என அஞ்சி "வாழி" என்று உடன் நிற்பார் வாழ்த்துவது வழக்கம். முகஞ் சுளித்திருந்த காதலியும் தனது சினத்தை மறந்து வாழி என்று அவனைத் தழுவினாள். இதற்குள் மற்றோர் நினைவு வரவே கையை நெகிழ்த்துக் கலங்கினாள். "தும்முவது பிறர் தம்மை நினைத்தால்தானே. இவரை நினைப்பதற்கு நம்மினும் வேறு யார் மங்கையர் உள்ளார்கள். நம்மை மறந்துவிட்டு இன்னும் யாரோடு இவர் கூடிக் குலாவுகின்றாரோ அவர்கள்தான் இப்போது இவரை நினைத்திருக்க வேண்டும்" என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி, நெஞ்சம் புண்ணாகிப் பெருமூச்சு விட்டு "நீர் யாரை நினைத்துத் தும்மினீர்" என்று சினந்து நின்றாளாம்.

> வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
> யாருள்ளித் தும்மினீர் என்று

என இக்கதையை இரண்டுவரியில் கூறிவிட்டார். ஒருவர் நினைக்க ஒருவர் தும்மும்படியாக அன்பாயினாரது உடலம் ஏதோ ஒருவகையாக இணைக்கப்பட்டிருந்ததென அவர்கள் எண்ணி இருந்தனர். அஃது எவ்வாறாயினும் ஆகுக. தனக்கு அன்பாயினார்க்கு ஏதேனும் தீங்கு வருவதாயிருந்தால் அதனை முன்னதாகச் சிலர் அறிவதை நாம் அறிந்துள்ளோம். தனது குழந்தைகளுக்கு ஏதேனும் நேர்ந்து விட்டதோ என்ற எண்ணம் திடீர் என மனதில் எவ்வாறோ எழுகின்றது. உடனே அத்தாய் ஊருக்குத் திரும்பி வருகிறாள். வந்ததும் தன் குழந்தைகள் பாயும் படுக்கையுமாய் நோயாய் இருப்பதைக் காண்கின்றாள். இவ்வாறு ஒரு முறையல்ல இருமுறையல்ல, பலமுறையும் நேர்ந்துள்ளதெனப் பலரும் பலரைப்பற்றிக் கூற நாம் கேட்டிருக்க வில்லையா? சிற்றன்புள்ள இடங்களிலேயே இங்ஙனம் இருக்குமானால் முற்றிப்பழுத்த பேரன்புள்ள இடத்தில் ஈருடலும் ஒருடலாய் இணைந்து ஒற்றித்து ஒன்றேயாய் நிற்றலைக் கூறவும் வேண்டுமா? அந்நிலையில் ஒருவர் நினைப்பதனை மற்றவர் அப்போதே நினைக்கின்றனர். இதனை ஓரிடத்தில் மிக அழகாக எடுத்துரைக்கின்றார் சேக்கிழார் பெருமான். திருவாரூரில் கடவுளைத் தொழச்சென்ற ஆளுடைய நம்பி பரவையாரைக் கண்டார்; அவ்வம்மையாரும் நம்பியை அப்போதே கண்டார். இருவரிடத்தும் ஒரே போதில் ஒரே எண்ணம் எழுந்தது. நம்பிகள்

> "கற்பகத்தின் பூங்கொம்போ
> காமன்தன் பெருவாழ்வோ
> பொற்புடைய புண்ணியத்தின்
> புண்ணியமோ புயல் சுமந்து
> விற்குவளை பவளமலர் மதிபூத்த
> விரைக்கொடியோ
> அற்புதமோ சிவனருளோ
> அறியேனென் றதிசயித்தார்.

பரவையாரும்,

> முன்னேவந் தெதிர்தோன்று முருகனோ பெருகொளியால்
> தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
> மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ
> என்னேஎன் மனந்திரித்த இவன்யாரோ என நினைந்தார்.

நம்பிகள் "கற்பகத்தின் பூங்கொம்போ" என்று தெய்வயானையாரை நினைக்கப் பரவையாரும் அதற்கேற்ப "முருகனோ" என நினைத்தார். நம்பிகள் "காமன் தன் பெருவாழ்வோ" என வேளின் மனைவியாகிய இரதியை எண்ண அம்மையார் "மாரனோ" என எண்ணினார். "விரைக்கொடியோ" என அவர் ஐயமுற இவர் "விஞ்சையனோ" என ஐயமுற்றார். அவர் சிவனருளோ என வியந்து நிற்க இவர் "அண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ" என வியந்து நின்றார். இவ்வாறு அன்பின் அருமறைப் பொருளை அறிந்ததாலன்றோ சேக்கிழார் பெருமானைத் தெய்வப் புலவர் என்பது.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 23.

நள வெண்பா

(430-வது பக்கத் தொடர்ச்சி)

சுயம்வர காண்டம்.

> மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
> பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
> செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
> பொய்கைவாய்ப் போவதே போன்று. 120.

அன்வயம்:—மின்நிறத்துச் செய்யதாள் வெள்ளைச் சிறை அன்னம் செம்கலப் பொய்கைவாய்ப் போவதே போன்று, பொன்னின் மடப்பாவை, மன்னர் விழித் தாமரை பூத்த மண்டபத்தே, போய்ப் புக்காள்.

பதவுரை.

மின் - மின்னலினது
நிறத்து - ஒளியை உடைய
செய்ய - சிவந்த
தாள் - கால்களையும்
வெள்ளை - வெண்மையான
சிறை - இறகுகளையும் உடைய
அன்னம் - ஓர் அன்னப்பறவை
செம் - சிவந்த
கமலம் - தாமரைமலர்கள் பூத்த
பொய்கைவாய் - தடாகத்தினிடத்தில்
போவதே - போவதையே
போன்று - போல,
பொன்னின் - இலக்குமியைப்போன்ற
மட - இளமைபொருந்திய
பாவை - பதுமையை ஒத்த தமயந்தி
மன்னர் - அரசர்களுடைய
விழி - கண்களாகிய
தாமரை - தாமரைகள்
பூத்த - மலர்ந்த
மண்டபத்து - மண்டபத்தில்
போய் - போய்
புக்காள் - புகுந்தாள்.

விளக்கம்:—தமயந்தியை அன்னமாகவும் மண்டபத்தைத் தடாகமாகவும் அங்கிருந்த அரசர்களது மலர்ந்து நோக்குங் கண்களைத் தாமரையாகவும் இக்கவி வருணித்திருக்கின்ற அழகு கருதத்தக்கது. அன்னந் தடாகத்தில் போவதைப்போல் தமயந்தி மண்டபத்திற்குள் போயினாள் என்று கூறுகின்றபடியால் இச்செய்யுளில் உவமை அணி அமைந்திருக்கின்றது. விழித்தாமரை, என்பது மாத்திரம் விழி ஆகிய தாமரை, எனவிரிந்து விழியே தாமரை எனத்தோற்றுவித்தலால், உருவகம்.

ஒன்றினிற்கு மற்றொன்று உவமையாவது மூன்று காரணத்தால் நேரலாம். மேகம் போன்ற கூந்தல், பால் நுரைபோன்ற வெண்துகில்; புலியைப்போல் கொடியவன்; என வரும்போது மேகத்திற்கும் கூந்தலுக்கும் பொதுத்தன்மை ஏற்படுவது கருமை என்னும் குணத்தினால் அல்லவா. அவ்வாறே நுரைக்கும் துகிலிற்கும், வெண்மை நுண்மை என்னும் குணங்களால் பொருத்தம் காண்கிறோம். அப்படியே புலிக்கும் கொடியவனுக்கும் பொதுக்குணம் கொடுமை. குணம் என்றாலும் பண்பு என்றாலும் ஒரே அர்த்தம். இப்படிக் குணத்தைப் பற்றி வருகின்ற உவமைகளைப் பண்பு உவமை என்பர்.

இனிப், புலியைப்போல் பாய்ந்தான்; மயில் போல் நடந்தாள்; பேயைப்போல் ஆடினான், எனவரும் உவமைகளை நோக்கினால், பாய்தல் நடத்தல் ஆடல் ஆகிய தொழில்களால் பொதுத்தன்மை ஏற்படுவது தெரியும். இவ்விதம் வருவன தொழில் உவமை.

விளைகின்ற பயனை நோக்கி இரண்டு பொருள்கள் ஒன்றிற்கு ஒன்று உவமையாதலும் கூடும். பால் போன்ற சொல்லாள். மேகம் அன்ன ஈகையான். தீ ஒத்த செய்கையான், என்பன போன்ற உவமைகளைப் பார்ப்போமானால், பால் அருந்தினவர் பெறும் பயனாகிய இனிமையை அவன் சொல்கேட்டு அடையலாமென்றும், மேகத்தினிடத்தில் பெறும் பயனை இவனிடத்தில் பெறலாமென்றும், தீயினால் வரும் துன்பப்பயன் இவன் செய்கையால் வரும் என்றும் தெரிகின்றது. இவ்வாறு பயனைக் கருதி உவமை ஆவன, பயன் உவமை.

ஆதலால் பொதுத்தன்மை ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களை மனதில் வைத்துக்கொண்டு பார்த்தால் உவமைகள் மேற்கூறிய மூன்று வகைகளுக்குள் அடங்கும். இந்தச் செய்யுளில், பொன்னின் மடப்பாவை - இலக்குமியைப்போன்ற இளமை பொருந்திய தமயந்தி, என வந்திருப்பது இளமை என்னும் குணம் - பண்பு பற்றி நேர்ந்ததால் அது பண்பு உவமை. அன்னம்போல் தமயந்தி புகுந்தாள், என்றது தொழிலை ஒட்டி வந்ததால் தொழிலுவமை.

பண்பு உவமை, தொழில் உவமை, பயன் உவமை என்னும் இப்பாகுபாடு, உவமைகள் அமைகின்ற காரணம் பற்றி உண்டாயிற்று. எக்காரணம்பற்றி உவமையானாலும் அந்த உவமையை அமைக்கின்ற சொல்லைக் கொண்டு உவமைகளைத் தொகை உவமை, விரிஉவமை என வேறு இரண்டு விதமாகவும் பிரிக்கலாம். அதனை வேறு இடத்தில் விளக்குவோம்.

குறிப்பு:—1. பாவை:—பதுமை என்னும் அர்த்தத்தைத் தரும் இச்சொல், இங்கே அந்தப்பாவை போன்ற தமயந்திக்குப் பதில் ஆக நிற்பதால், அது உவமையாகு பெயர்.

2. ஓ என்பது ஒரு இடைச்சொல் என்றும் அது பெயர்ச்சொல்லோடாவது வினைச்சொல்லோடாவது சேர்ந்து பலவித பொருள்களைத் தரும் என்றும் முன்னே கூறினோம். (369, 392, 409-வது பக்கங்கள்) ஏ என்பதும் ஒரு இடைச்சொல். இது நான்கு விதமான பொருளில் வரும். (a) இவனே என்மகன் என்னும்போது, 'மற்றவர்களல்ல என்மக்கள். இவன்தான் என்மகன்', என்று பிரித்துக் காட்டுவதால், இங்கு ஏகாரம் பிரிநிலை (பிரித்து நிறுத்துதல்) பொருளில் வந்தது. (b) வந்தவன் இராமனே? என்னும்போது ஒவ்வொரு சமயம் ஏகாரத்திற்கு வினாப்பொருளும் உண்டு. ஆனால் இது மற்றப் பொருள்களோடு மயங்கக்கூடுமாகையால், வந்தவன் இராமனோ அல்லது இராமனா என்று வினவுவதுதான் இயற்கை.

(c) நாலேகால் ரூபாய், அல்லது காலே அரைக்காலே வீசம் - என வரும்போது நாலு ரூபாயும் கால் ரூபாயும், என்றும், கால் ரூபாயும் + அரைக்கால் ரூபாயும் + வீச ரூபாயும் (= 7 அணா) என்றும் எண்ணுவதற்கு ஏ உபயோகப்படுவதால், அதற்கு எண்ணுதல் பொருளும் உளது. இரண்டுகோடியே ஐம்பது லக்ஷத்து........என வருவதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

(d) பொய்சொன்னால் புழுக்குமே வாய்; மாதர் கற்பினால் பெய்யுமே மழை; இவைகளில், சந்தேகத்தை ஒழித்து நிச்சயம் என்று தேற்றுகின்றபடியால், ஏகாரத்திற்கு இருக்கும் பொருள், தேற்றப்பொருள்.

பொருள் இந்த நான்கு ஆனாலும் ஏ காரத்தால் செய்யுளின் ஓசை நடை பெருகிறபயனுமுண்டு. அப்பொழுது அதனால் பொருள் வேறுபாடு ஒன்றும் ஏற்படுவதில்லை. பாட்டின் சப்தம் மாத்திரம் பூர்த்தியாகும். இப்படிப் பாட்டில் பொருளில்லாமல் ஓசை நிறப்புவதற்கு மாத்திரம் வருகிற இடைச் சொற்களுக்கு அசை என்று பெயர். அசையாக வரும் இடைச்சொற்கள் பல உள. அவைகளுள் ஏகாரம் ஒன்று. பாட்டினுடைய ஓசையை அசைக்கவருவதால் அசை என்று அழைக்கப்படுகின்றது.

இந்தச் செய்யுளில், மண்டபத்தே, என்பதிலுள்ள ஏகாரம், பிரிநிலை வினா எண் தேற்றம், என்னும் ஒருவிதமான பொருளும் விளைக்காமல், ஓசையைக் கருதி மாத்திரம் வந்திருப்பதால், அது அசை. போவதே, என்பதிலுள்ள ஏகாரத்தையும் அசை என்றாவது கொள்ளலாம், அல்லது, தமயந்தி அங்குப் போனது ஒரு பெண் மண்டபத்திற்குள் போவதுபோல இல்லை, ஒரு அன்னம் வாவியில்போவதுபோல இருந்தது என்னும் பொருளைத் தரக்கூடுமாகையாலும், பிரிநிலை ஏகாரம் எனவுஞ் சொல்லலாம்.

வடங்கொள் வனமுலையாள் வார்குழன்மே லோடு
நெடுங்கட் கடைபார்த்து நின்றா—னிடங்கண்டு
பூவாளி வேந்தன்றன் பொன்னுவம் பின்னேயிட்
டேவாளி நாணின்மே லிட்டு. 121.

கருத்து:—தமயந்தி இன்னவாறு மண்டபத்துள்வர அவள் யாரைக் கடைக்கண்ணால் பார்க்கின்றாளோ அவரைத் தன் பாணத்தால் அடிக்கும் பொருட்டு மன்மதன் சித்தமாய்க் காத்துக்கொண் டிருந்தான்.

சுயம்வரம் இருவிதம். ஒன்று, வந்திருக்கு மன்னர்களுள் ஒருவனை அரசகுமாரி தானே தேர்ந்து விவாகம் செய்துகொள்ளுதல். மற்றொன்று, இன்ன காரியத்தைச் சாதித்தவன் யாவனோ அவனையே இவள் மணப்பதென்று காட்டுவது ஆகும். சீதை, துரோபதை ஆகியவர்களுடைய சுயம்வரம் இப்பின்னதற்கு உதாரணம். தமயந்தியின் சுயம்வரம் முதல் சொன்னவகையைச் சேர்ந்ததாகும். இதன்படி, அரசகுமாரியுடன் வந்த அவள் உயிர்த்தோழி அவளுக்கு அங்கு வந்திருக்கின்ற அரசர்கள் ஒவ்வொருவரையும் பேர் குலம் செல்வம், ஆற்றல் குணம் இவைகளைச் சொல்லி அறிமுகம் செய்துவிக்க, யாவும் கேட்டபின் அக்குமரி தனது மனம் நாடும் வண்ணம் ஒருவனுக்கு மாலையிடுவது வழக்கம். இனி வரும் பதினேழு செய்யுள்கள் ஒவ்வொரு அரசனுயுத் தோழி தமயந்திக்கு வருணித்துச் சொல்வதைப்பற்றிக் கூறுகின்றன. அவைகளை நாம் இப்பாடத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை யாகையால் பொருள் முதலியன கூறாமல் செய்யுளை மாத்திரம், தொடர்ச்சி அறாதபடி எழுதிவைப்போம்.

மன்னர் குலமும் பெயரும் வளநாடு
மின்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினு
டோர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 122.

சோழ மன்னன்.

பொன்னி யமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
சென்னி தடவுந் திருநாடன்—பொன்னிற்
சுணங்கவிழ்ந்த பூண்முலையாய் சூழமரிற் றன்னர்
கணங்கவிழ்ந்த வேலனிவன் காண். 123.

பாண்டிய மன்னன்.

போர்வாய் வடிவேலாற் போழப் படாதோருஞ்
சூர்வாய் மதரரிக்கட் டோகாய்கேள்—பார்வாய்ப்
பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற்
றிரித்தகோ னிங்கிருந்த சேய். [செண்டாற்

சேர மன்னன்.

வென்றி நிலமடந்தை மென்முலைமேல் வெண்டுகில்
குன்றருவி பாயுங் குடநாட—னின்றபுகழ் [போல்
மாதே யிவன்கண்டாய் மானத் தனிக்கொடியின்
மீதே சிலையுயர்த்த வேந்து. 125.

யதுவமிச மன்னன்.

ஆழி வடிம்பலம்ப நின்றானு முன்னொருகா
லேழிசை நூற் சங்கத் திருந்தானு—நீள்விசும்பி
னற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானுங் கண்டாயிச் சேய். 126.

குறிப்பு:— பாரதப்போர் நிகழ்வதற்கு வெகுகாலம் முன்னரே நளன்கதை நடந்திருக்க இங்குக் கூறுவது காலம் பிறழ்ந்த குற்றமாம் (anachronism).

குருநாட்டரசன்.

தெரியி லிவன்கண்டாய் செங்கழுநீர் மொட்டை
யரவின் பசுந்தலையென் றஞ்சி—யிரவெல்லாம்
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புட் டாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன். 127.

மத்திரநாட் டரசகுமாரன்.

தேமருதார்க் காளை யிவன்கண்டாய் செம்மலர்மேற்
காமருசங் கீன்ற கதிர்முத்தைத்—தாமரைதன்
பத்திரத்தா லேற்கும் படுகர்ப் பழனஞ்சூழ்
மத்திரத்தார் கோமான் மகன். 128.

மச்சதேசத் தரசகுமாரன்.

அஞ்சாயன் மானே யிவன்கண்டா யாலைவாய்
வெஞ்சாறு பாய விளைந்தெழுந்த—செஞ்சாலிப்
பச்சைத்தாண் மேதிக் கடைவாயிற் பாலொழுகும்
மச்சத்தார் கோமான் மகன். 129.

அவந்தி மன்னன்.

வண்ணக் குவளை மலர்வௌவி வண்டெடுத்த
பண்ணிற் செவிவைத்துப் பைங்குவளை—யுண்ணு
தருங்கடா நிற்கு மவந்திநா டாளு
மிருங்கடா யானை யிவன். 130.

பாஞ்சால வேந்தன்.

விடக்கதிர்வேற் காளை யிவன்கண்டாய் மீனின்
றொடக்கொழியப் போய்நிமிர்ந்த தூண்டின்—
[மடற்கமுகின்
செங்தோடு பீறித்தேன் செந்நெற் பசுந்தோட்டில்
வந்தோடு பாஞ்சாலர் மன். 131.

கோசலத் தரசன்.

அன்னந் துயிலெழுப்ப வந்தா மரைவயலிற்
செந்நெ லரிவார் சினையாமை—வன்முதுகிற்
கூனிரும்பு தீட்டுங் குலக்கோ சலநாடன்
றேனிருந்த சொல்லாயிச் சேய். 132.

மகதமன்னன்.

புண்டரிகந் தீயெரிவ போல்விரியப் பூம்புகைபோல்
வண்டிரியுந் தெண்ணீர் மகதர்கோ-னெண்டிசையிற்
போர்வேந்தர் கண்டறியாப் பொன்னுவம் பின்
தேர்வேந்தன் கண்டாயிச் சேய். [னுடைய

அங்கநாட் டரசன்.

கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவளக் கோடேறித்
தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால்-வான்கடல்வந்
தந்தோ வெனவெடுக்கு மங்கநா டாளுடையான்
செந்தேன் மொழியாயிச் சேய். 134.

கலிங்கநாட் டரசன்.

வெள்வாளைக் காளைமீன் மேதிக் குலமெழுப்பக்
கள்வார்ந்த தாமரையின் காடுழக்கிப்—புள்ளோடு
வண்டிரியச் செல்லு மணிநீர்க் கலிங்கர்கோன்
றண்டெரியுற் றேர்வேந்தன் றான். 135.

கேகயநாட் டரசன்.

அங்கை வரிவளையா யாழித் திரைகொணர்ந்த
செங்கண் மகரத்தைத் தீண்டிப்பேரய்க் - கங்கை
[யிடைச்
சேல்குளிக்குங் கேகயர்கோன் றெவ்வாடற் கைவரை
வேல்குளிக்க நின்றானிவ் வேந்து. [மேல்

காந்தார வேந்தன்.

மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேகு மன்னந் தனிக்கயிற்றிற்—போர்நீள்
கழைக்கோ தையரேய்க்குங் காந்தார நாடன்
மழைக்கோதை மானேயிம் மன். 137.

சிந்துநாட் டரசன்.

அங்கை நெடுவேற்க ணாயிழையாய் வாவியின்வாய்ச்
சங்கம் புடைபெயரத் தான்கலங்கிச்—செங்கமலப்
பூச்சிந்து நாட்டேறல் பொன்விளைக்குந் தண்பணை
மாச்சிந்து நாட்டானிம் மன். [சூழ்

இன்னவாறு சேடி, தமயந்திக்குக்காட்டிவரும் அம் மண்டபத்தே இந்திரன் வருணன் அக்னி எமன் ஆகிய நான்கு தேவர்களும் நளனினுடைய உருவத்தை எடுத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக்கண்டு அவள் கலங்கினாள் என்பதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாண் மற்றவரைக் காணாநின்
றாசலா டுற்றா ளுளம். 139.

குறிப்பு:—காணா, என்பது இங்குக் கண்டு எனும் பொருளில் வந்த உடன்பாட்டு வினைஎச்சம். (50-வது, 166-வது பக்கங்கள் பார்க்க).

இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி.

189006

(434-வது பக்கத் தொடர்ச்சி.)

சிறப்பு முறைகள்.

கலைகளின் சத்துக்களை நூல்களில் கூட்டல்.

நூலின் பயன்.

"நூலின்றிக் கலை யில்லை, கலைக்கன்றி நூ லில்லை", என்னும் வாக்கியம் இயற்கையிலும் உருவகத்திலும் பொருந்தும். நூலைக்கொண்டு வெள்ளைக் கலைசெய்வதே ஒருவி தக்கலையாம்: அதுபோல் எப்பனுவலும் கலைகளின் இலக்கணம் பொருந்தாதிருப்பின் அந்தம் இன்றாம். ஆன்றோர் அறுபத்து நான்கு கலைகள் உளவென்பர். அவற்றுள் ஓவியம், சிற்பம், சங்கீதம் எப்புலவனுக்கும் கண்ணெதிரில் நிற்கவேண்டியன. ஒரு ஸ்தலத்தை ஒரு கவி வர்ணிப்பானாயின் உடனே ஒரு சித்திரம் ஓவியத்தில் காட்டக்கூடியதுபோல் இருக்குமாயின் அக்கவி முதன்மையான ஏற்றம்பெறும். அன்னங்கள் தாமரைத் தடாகத்தில் உலாவுகின்றன என்பதற்கும் அதையே அடியில்கண்ட சம்பந்தர் பாட்டிற்கும் ஒப்பு நோக்குக.

"வண்டாமரை மலர்மேல் மடவன்னம் நடை பயில
வேண்டாமரை செந்தாதிர் வீழும் மிழலையே."

இதில் அன்னம் தாமரைமேல் நடப்பதும், முற்றும் மலர்ந்த மலர்களின் மகரந்தம் சொரிதலும் எதிரில் ஒரு படம்போற் காணக்கிடக்கின்றன. இதன்றியும் உபயோகிக்குஞ் சொற்றொடர்களிலும் உரையை மறந்து உருவத்தை வெளிக்காட்டும் பல பாக்கள் இத்தகைய கவிவாணர்களிடத்தில் காணலாம்.

'மிக நல்ல வீணைதடவி' என்பது வீணை மீட்டுதலை உருக்கொடுத்துக் காட்டுகின்றது. தேவாரத்தில் இத்தகைய * பல காணலாம்.

ஓவியத்தின் சாரம் மாத்திரமன்று: சிற்பமும் ஓவியமும் கவி நடைகளில் ஓடும் இரத்ததாதுக்கள் எனலாம். முகம் எழுதுவது ஓவியத்தில் சில ஹத்துவரையிலேயே சரியாய்க் கைப்பற்றக் கூடுமென்றும், அதற்குப் பின்னர்க் கைப்பற்ற முயல்வது மனிதனால் ஆகாத காரியமென்றும், நஞ்சமையாசிரியர் கூறுவார். அரம்பயரை உருவம் எழுதுதல் ஓவிய சாஸ்திரத்தில் மிகவும் சுலபமான காரியமே. ஒரு அழகிய விலைமாதைச் சித்திரித்து அவளுக்கு அதிக ரூபலாவண்ணியம் கொடுக்கும் வர்ணத்தை முகத்தில் இட்டால் அரம்பாஸ்திரி யாவாள். சரஸ்வதி, இலட்சிமி, பார்வதி, இவர்களை எழுதுவதெப்படி? அவர்கள் முகம்உலகத்திலில்லை. இதனாலேயே இரவிவர்மா எழுதிய சரஸ்வதி படத்தில் உள்ள உருவம் கல்வி நிறைந்த முகத்தைக் காட்டவில்லை. இரவிவர்மா இலக்குமியோ நல்குரவால் வதையும் முகத்துடன் விளங்குகின்றாள். பார்வதி பரமசிவன் மலையாள தேசத்திலுள்ள சாதாரண ஜனங்கள் உருவம் பெற்றிருக்கின்றார்கள். இதையறிந்தே அப்பர்* ஓவியஇலக்கணத்தைக் குறிப்பிடுமிடத்து,

"கோவணம் உடுத்த வாறும் கோளர வசைத்த வாறும்
தீவணச் சாம்பல் பூசித் திருவுரு இருந்த வாறும்
பூவணக் கிழவ னாரைப் புலியுரி யரைய னாரை
ஏவணச் சிலையி னாரை யாவரே எழுது வாரே?

என்றார்,

ஓவியத்தைப்போலவே சிற்பத்திலுள்ள அரிய சத்துக்களை, நூலில் வெளியாக்குங் கவிகள், அக்கலை,† ஞானத்தை நன்குவிளக்குவன. சிறந்த கோபுரங்களில் காட்டப்படும் உருவங்களிலும் விக்கிரகங்களிலும், நிற்கு நிலைக்கு ஒக்க முகாரவிந்தம் விளக்குதலும், அந்நிலைகளில் சொல்லாமலே நீதிகள் விளங்கிக்காட்டுதலும், சிற்பசாஸ்திரத்தில் தேர்ந்தவர் சிருஷ்டி; கவிகளின் பல பாரிசங்களும் உருவங்களும் அவ்வாறே அற்புதமான நிலைகளும் அவற்றினின்று எழும் நீதிகளும் விளக்கிக் காட்டும். அத்தகைய கவிகள் பலஉள. இதன்றியும் தற்காலத்தில் சினிமா என்பது இயங்கும் உருவ இயற்கை காட்டுவதுபோலவே, தமிழில் கவிகள் பாடப்பட்டிருக்கின்றன. ஆண்டாள் திருமொழியிலும், திருப்பாவையிலும் பல உதாரணங்கள் உள. இவ்வாறு கைத்தொழில்கலைகளையும் தமிழ்க்கவிகளின் பற்பல இடங்களில் காணலாம்.

* "மாசி லொள்வாள் போன்மறியு
மணி நீர்த்திரைத் தொகுதி
ஊசலை யாடியங் கொண்
சிறையன்ன முறங்கலுற்றால்,"
பாசறை நிலம் பருகியவண்டு பண் பாடல் கண்டு
வீசுங்கெடில வடகரைத்தே யெந்தை வீரட்டமே.
திருவதிகை வீரட்டானம் - திருவிருத்தம்.

* அப்பர்—திருவாதிரைத் திருப்பதிகம்.

† சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்
[ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்."
—பெரியபுராணம்.

அறுபத்து நான்கு கலைகள் என்று சொல்லப்பட்டன வற்றில், சங்கீதமே தமிழ்க்கவியில் பெரும்பாலும் கலந்துள்ளது. இயல், இசை, நாடகம் என மூன்று தமிழ் இலக்கியப் பிரிவுகள் ஏற்பட்டிருந்தும், இசைத் தமிழ் பெரும்பாலும் இயற்றமிழை விழுங்கி விளங்குகின்றது. தமிழில் பற்பல பண்கள் உள. அவை சைவ வைஷ்ணவ திருமுறைகளிற் காணலாம். தமிழில், பண்கள் என்று நாம் தற்காலத்தில் கூறுவோமாயினும், "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்" என்று பரமனை உருவகப்படுத்தினர், மூவரும். தமிழே பண்மய மானதென்றும், தமிழ் என்பதற்கு இனிமை என்பது பொருளாதலால், தமிழ் இயங்குவதே சங்கீதம் என்றும் கூறுவர் மேலோர். அந்நாதமே நாதப் பிரம்மம் எனவும் கூறுவர். இதற்கு மேற்கோள்.

"பண்ணும் பதமேழும் பல ஓசைத் தமிழவையும்
உண்ணின்றதோர் சுவையும் உறு தாளத் தொலிபலவும்
மண்ணும் புனல் உயிரும் வருகாற்றும் சுடர் மூன்றும்
விண்ணும் முழுதானான் இடம் விழிம் மிழலையே."

என்றார் சம்பந்தர்.

சங்கக்காலத்திற்குப் பின்னர், விருத்தக் கவிகள் பெரும்பாலும் தமிழில் வளரலாயின. அவற்றுள் சந்த விருத்தங்களே, சம்பந்தர், திருமழிசை ஆழ்வார் சுந்தரர் முதலாயினோர் கையாண்டவை. பண்கள் இருவகைய வென்றும், அவை நேரிசைப் பண்களென்றும் சந்தப் பண்களென்றும் புலவர்கூறுவார். சந்தம்என்பது என்ன? அது எங்ஙனம் உண்டாகுமென்பதற்கு நேரானவிடை நமது பழைய இலக்கணங்களிலில்லை 1882-ம் வருஷத்தில் எழுதிய விருத்தப் பாவியல், வீரசோழியத்தை ஒருவாறு தழுவிச் சந்தத்திற்குக் காரணம் சீர்கள் அடுக்கு, மாத்திரை அளவு ஒழுங்கால் எழும் என்றும், தமிழில் சந்த விருத்தங்கள் உள்ளன இவ்விவையே என்றும் * வீரபத்திர முதலியார் வரையறுத்துக் காட்டினர்.

"சீரியலினால் அமைவ, தீந்தமிழ் விருந்தம்" என்றும் "சந்த மாத்திரையினால் இயலும்" என்றும், இந்நூலாசிரியர் கூறியதைச் சற்றுக் கவனிப்போம். மாத்திரைக் கணக்கு நன்னூலில் வகுத்தது. சங்கீதமான சந்தத்தில் ஏலாது. இசையில் மாத்திரை அளவு வேறுபடும் என்று பவணந்தி கூறினர் அன்றி அவ்வேறுபாடுகளை நன்னூலில் † விளக்கவில்லை. அவ்வேறுபாடுகள் யாவை எனில் சந்தத்தில் தனிக்குறிலே ஒரு மாத்திரை பெறும்,

"குற்றுயிர் தனக்கும் இருமாத்திரை குறித்தார்
ஒற்றதை யடுப்பின் உயிர் ஒன்று தனி நிற்பின்
மற்றவை தனக்கு மிருமாத்திரை வகுத்தார்
ஒற்றதை யடுப்பினும் உணர்ந்தறிய வல்லார்."

என்றார் விருத்தப்பாவியலார். இதுவே வீரசோழியத்தில், லகு, * குரு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒற்றிற்கு அரை மாத்திரையாயினும், ஒரு குறிலுடன் ஒற்று "சேருமாயின்" அவ்வசை நெட்டெழுத்தின் மாத்திரையாகிய இரு மாத்திரை பெறும். ஒரு நெடிலுடன் ஒற்று சேருமாயின் மொத்தம் இரண்டரை மாத்திரை ஆகாமல், இருமாத்திரையிலேயே நிற்கும். இதனால் சப்த விருத்தங்கள் சீர்கள் ஒழுங்கு மாறியிருப்பினும் மாத்திரை அளவு ஒழுங்கு மாறாமையால், சுத்தமான நாதத்தை எழுப்பும். இம்மாத்திரை அளவுகள் பற்பல ஒழுங்குகளாயும், பற்பல வண்ணங்களுடன் வருவதை அறியாமல், சில புலவர் சந்தக் குழிப்பு என்று பலவித வாய்பாடுகள் தொகுக்கலானர். 'தன்னச் சந்தம்' தய்யச் சந்தம் முதலானவை, பிள்ளைகளுக்கு வாசிக்கும் விதம் காட்ட, அருணகிரிநாதர் திருப்புகழ் முதலானவற்றிற்குத் துணைக் கருவியாமே யன்றி அவை சந்தத்திற்கு இலக்கணமாகா.

சந்தவியலில் நீட்டல் விகாரம் முதலிய விகாரங்கள் அவசியமில்லை. தனிக்குறிலும், இரு மாத்திரை அளவு பெற இசைக் கருவியில் உச்சரிக்கக்கூடுமாதலால், எழுத்துக்கள் நீட்டவேண்டியது அவசியமில்லை. உதாரணம், "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி" என்னும் தாயுமானவர் பாடலில் "கி" என்பது பாடும்போது இரண்டுமாத்திரை பெறுகின்றது.

சந்தங்களின் மகிமை செவ்வனே அறிந்தவன் கம்பன். கம்பராமாயணத்திலுள்ள சந்தவிருத்தங்களே தமிழில் சுத்தமானவையும் மெருகிடப் பட்டவையுமாம். திருமுறையிலுள்ள சந்தங்கள் பல நாம் கையாளுவதற்குக் கடினமாகவே யிருக்கின்றன. ஆதலால் தற்காலத்தில் சந்தவிருத்தங்கள் எழுதும் புலவன் கம்பராமாணத்தில் உள்ள சந்த விருத்தங்களையே ஆதாரவாகப்பற்றி எழுதக் கடவன். 'சீகாமரம்' முதலிய பண்கள் இப்போது பாடுவார்களில்லை.

மற்றக்கலைகளில் தமிழ் யாப்புடன் பிணைந்து நடந்தவற்றுள் ஒன்று பரதநாட்டியம் என்னும் அபிநயக்கலை. இது பரத்தையர் கைப்பட்டுப் பெருமை அழிந்தது. கூத்துக்களின் இலக்கணம் சிலப்பதிகாரத்தில் காணலாம். முற்காலத்தில் கூத்துக்களில் ஒன்றாகிய "தோலின் பாவை" என்பதை மாணிக்கவாசகர் † உதாரணமாகக் காட்டுகின்றார். ஆடுதலும், பாடுதலும் ஒன்றுக்கொன்று துணையானவையாதலால் ஆட்டங்களைப் ‡ பாட்டில் புலவர் காட்டுகின்றார். இக்கலையின்பாலே நாடகத்தமிழும் நடக்கும்.

E. T. சொக்கம்மாள்.

---

* T. வீரபத்ர முதலியார் B. A. B. L. (இவர் சுமார் பத்து வருஷத்திற்குமுன் காலஞ் சென்ற சென்னை ஹைகோர்ட்டு வக்கீல்.)

† "மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையௌக் குறுக்க மொற்றளபு
அரையொற் றிஉக் குறுக்க மாய்தம்
கால்குறள் மஃகா னய்தம் மாத்திரை."
ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்
மேவு மிசை விளி பண்டமாற் றாதியின். (46)

(44 § நன்னூல்)

* "ஏறிய நெட்டெழுத்தே நெடிலொற்றே யெழில் [வடநூற்
கூறிய சீர்க்குறி லொற்றே குரு வாங் குறிலதுவே
வேறியல் செய்கை யிலகுவென்றாகும் வியன்குறிலு
மீறியலிற் பிரிதாமொரு காலென் றியம்புவரே."

வீரசோழியம் யாப்புப் படலம் § 26.

† "தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று வீழ்ந்து கிடப்பேனே."

‡ பூதங்கள் தோறும் நின்றா யெனினல்லால்
போக்கிலன் வரவிலன் என நினைப்புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக்கண் டறிவாரை

— திருவாசகம்.

வெற்றியெனும் குதர்க்கம்.

(The fallacy of success, by G K. Chesterton.)

[431-ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வார்த்தைகள் எல்லாம் கேட்பதற்கு ஊக்கந்தரத் தக்கனவாய்த் தானிருக்கின்றன. ஆனால் நான் சீட்டாட்டத்தைப்பற்றிய விதிகள் ஏதேனும் சொல்லித்தருகின்ற ஒருபுத்தகத்தைக் காணவிரும்புவேன். விதி தெரிந்தால் சீட்டாடி விடலாம் என்று கருதலாமோ. விதிக்கு மேல் மனிதனது புத்திசாலித் தனத்தையோ (Talents) எதிராளியை ஏமாற்றத் தக்க சாமர்த்தியத்தையோ (dishonesty) பொருத்திருக்கிறது சீட்டாட்டம்.

நான் ஒரு பத்திரிகையில் விநோதமான வியாசமொன்றைக் கண்ணுற்றேன். 'மனிதனைப் பணக்காரனாகச் செய்யும் உணர்வு' என்பதே அவ்வியாஸத்தின் மகுடம். அப்பத்திரிகையின் முதல் பக்கத்தை (ஜெர்மன் தேசத்துச் செல்வவந்தரான) லார்ட் ராத்ஸ்சைல்டின் (Lord Rothschild) படம் அலங்கரித்தது. பணக்காரனாவதற்கு நியாயமானதும் அல்லாததுமான பல வழிகள் இருக்கின்றன. எனக்குத்தெரிந்த வரையில் கிறிஸ்தவமதம் வெறுக்கும் பேராசைப் பாவம் (The sin of Averice) என்னும் உணர்வுதான் பணமீட்டத் தூண்டுகோலாகும். இதைப் பற்றிப் பேசுவது நாம் எடுத்துக் கொண்ட கருமமல்ல. அந்தப் பத்திரிகையில் நான்கண்ட வெற்றிக்கு வழிகாட்டும் வியாசத்தின் ஒரு பகுதியை இங்கு வரைந்து காட்டுகின்றேன். இதன் அனுஷ்டானத்திற்கேற்ற தன்மையை நீங்களே பார்ப்பீர்கள். இதைப் படித்தபிறகு நாம் கையாளவேண்டிய அடுத்த படியெது வென்பதைச் சந்தேகமில்லாது துணியலாம். அது வருமாறு:—

"தற்கால வியாபார முயற்சியால் பணம் சேமித்தல் என்பதை 'வாண்டர்பில்டு' (Vanderbilt) என்னும் பேர் குறிக்கும். கர்னிலியஸ் (Corneleas) என்பவன் அமெரிக்காவின் முதல் பெரிய வியாபாரி. ஏழைக்குடியானவன் மகனாய் அவன்வாழ்க்கை துவக்கினான். கடைசியில் கோடீச்வரனானான்."

"அவனிடம் பணம் சம்பாதிக்கும் உணர்வு (Money making instinct) இருந்தது. நீராவி இயந்திரம் ஏற்பட்டதால் உண்டான சௌகரியத்தைக் கைவிடாது பற்றிக்கொண்டான். கப்பல் போக்குவரவு மூலமாயும் அமெரிக்க ரயில்வே மூலமாயும் பெரும் பொருளைத் திரட்டிவிட்டான்."

"அவனை நாம் இப்பொழுது தொடாமுடியாது. அவனுக்கு ஏற்பட்டதுபோன்ற வசதிகள் இப்பொழுது நமக்கு ஏற்படுகிறதில்லை. காலம் மாறிவிட்டது.

"என்றாலும் அவனது பொதுவான வழிகளை நாம் கையாளலாம். நமக்குக் கிடைக்கும் அவகாசங்களை விடாதுபற்றிப் பணக்காரர்களாக முயலவேண்டும்."

இவ்விநோதமான கூற்றைப் பார்த்தோம். இத்தகைய வியாசங்களுக்குள்ளும் புத்தகங்களுக்குள்ளும் இருப்பது என்ன? வியாபாரமுறை யல்ல. வாழ்க்கையின் வெறுப்பால் வந்த (Cynicism) மொழிகளல்ல. மனித உணர்விற்கெட்டாத பணமாயை (Mysticism of money). நான் மேலே குறித்த வியாசகர்த்தாவுக்கு வாண்டர்பில்ட்டு எப்படிப் பணக்காரனானான் என்றாவது ஒருவன் எப்படிப் பணக்காரனாகின்றான் என்பதைப்பற்றியாவது ஒன்றும் தெரியாது. ஆனால் அவ்வியாசத்தின் அடியில் பணம்சேர்க்க அனுஷ்டிக்கவேண்டிய முறையொன்றும் வகுக்கப்பட்டுள்ளது. ஆனால் அம்முறைக்கும் வாண்டர்பில்ட் பணம் சேர்த்ததற்கும் சம்பந்தம் ஏதுவும் காணப்படவில்லை. விளங்காத கோடீச்வர தத்துவத்தின் முன் அவர் சரண்புக விரும்புவதைத்தவிர வேறு ஒன்றும் நமக்குப் புலனாகவில்லை.

இதிலும் உண்மையுளது. நாம் வழிபடும் வஸ்துவின் விளங்காத செய்திதான் நம்மைக் கவர்கிறது. புலப்படாத் தன்மையால்தான் ஒருவஸ்து பெருமையும் அடைகிறது. உதாரணமாக, மாதொருத்தியினிடம் அன்பு கொண்டுள்ள ஒருவனுக்கு அவள் கட்டுக்கடங்காதவள், நியாயத்திற்குட்படாதவள் என்பதே மகிழ்ச்சியைத் தருகிறது. கடவுள்செயல் விளங்காத் தன்மையது என்றுசொல்வதில் கவி மகிழ்ச்சியடைகிறான். நமது வியாசகர்த்தா செய்யும் வழிபாடு வாண்டர்பில்ட் என்னும் கோடீச்வரனுக்கே. அவன் வழிபடு கடவுளிடமும் ஒரு இரகசிய மிருக்கிறது. அதை அவன் அறியான். தனக்குத்தெரியாதவொன்றைச் சனங்களுக்குச் சொல்லிவைப்பதாகப் பாசாங்கு செய்கிறான். அவன் எழுதிய 'பணம் சேமிக்கும் உணர்வு' என்ற வியாசத்தின் மற்றோர் பகுதி வருமாறு:—

"பணம்சேர்க்கும் உணர்வை ஜனங்கள் பண்டை நாட்களில் அறிந்திருந்தனர். 'மைடாஸ்' Midas என்பவன் கதையில் இதைப் போற்றியும்வந்தனர். மைடாஸ் தொட்டதெல்லாம் பொன். பணத்திற் கிடையில் அவன் வாழ்வு வளர்ந்தது. விக்டோரியா சகாப்தத்தில் இதைப் பரிகசித்தனர். இன்று பாருங்கள், எத்தனை மைடாஸ் இருக்கின்றனர். அவர்கள் தொட்டதெல்லாம் பொன்னாக்குகின்றனர். அவர்களை வெற்றி தொடருகிறது. அவர்களின் வாழ்க்கை முன்னேற்றமே. தவறுதல், தோல்வி என்பதே கிடையாது..."

வாய்மையே நோக்கின் மைடாவின் வாழ்க்கை தோல்வியே யாயிற்று. அவன் தொட்ட உணவுப் பொருள் அனைத்தும் பொன்னாக மாறியதால் பட்டினி கிடந்து வாடினான். நமது வியாசகர்த்தா இதை மறைத்தாலும், உண்மை யிதுவேயாகும். பண்டைக்கதைகள் எல்லாம் நாம் திரித்துக்கூறாத வரையில் சிறந்த பொருளுடையவையே யாகும். மைடாவின் வாழ்க்கை வெற்றி யுடையதல்ல, துக்ககரமானது. அவனுக்கு மேலும் கழுதைக்காதும் இருந்தது. இவ்விஷயத்தை வெளியிலுள்ளாருக்கு மறைத்து வைத்திருந்தான் மைடாஸ். இவ்விதமான சிறுவிஷயங்களில் அம்பட்டனை மாத்திரம் மறைத்து வைக்க முடியாதல்லவா? அம்பட்டன் மெதுவாகச் சாதாரண ஜனங்களிடம் இந்த இரகசியத்தைப் பரப்பினான். அது எங்கும் பரவலாயிற்று.

ராத்ஸ்சயில்டின் படத்தை மரியாதையுடன் நான் நோக்குகின்றேன். வாண்டர்பில்ட் பணம் குவிக்கச் செய்த செயல்களை மரியாதையுடன் படிக்கிறேன். நான் தொடும் வஸ்துக்கள் தங்கமாகாது என்பதை அறிவேன். மேலே கூறப்பட்டவர்கள், சிலவற்றில் பெரும் வெற்றி பெற்றுள்ளார். சில இடையூறுகளைக் கடந்துள்ளார். ஒருவகையில் அவர்கள் அரசர்களே. கண்டங்கள் கடந்து கடைச்சரக்குக்களைப் பிடிக்கவும், விற்கவும் அவர்களால் முடியும், எனினும் அவர்களைப்பற்றிய சிறிய இரகசியம் ஒன்று இருக்கிறது என்றும், அவர்கள்

மறைக்க முயலும் அது, காற்றின் உதவியால் என்காதிற் படுவதாகவும் எனக்குத் தோன்றுகிறது.

இத்தகைய சிறுமைப் புத்தகங்கள் அவமதிக்கப்பட்டு நாளடைவில் மறைவதைப் பார்ப்போம் என்று நாம் நம்ப வேண்டும். அப்புத்தகங்கள் சொல்லி வைப்பது வெற்றி பெறவல்ல, அயோக்கியத்தனத்தை வளர்க்கவே உதவுகின்றன. மேலும் மண்ணாசையை வளர்த்து வைக்கின்றன. பியூரிடன் (Puritans) வகுப்பினர் காமம் வளர்க்கும் புத்தகங்களைக் கண்டித்தனர். பேராசையும் அகம்பாவத்தையும் வளர்க்கும் இப்புத்தகங்களைப் பற்றி என்னசொல்வது. நூறு வருஷங்களுக்குமுன் தொழிற்சாலைகளில் வேலை கற்றுக்கொள்ளும் சிறுவர்களுக்கு, நேர்மையான உழைப்பும், சிக்கனமும் தங்களிடம் இருப்பின் அவர்களில் ஒவ்வொருவனும் லார்ட்மேயராகலாம் என்று சொல்லுவதுண்டு. இது உண்மையல்லவாயினும், இச்சொல்லில் ஆண்மையாவது இருக்கிறது. உழைப்பு ஒருவனைப் பணக்காரனாகச் செய்யா விட்டாலும், நல்ல வேலைக்காரனுக்கும், அந்நாள் தொழிற்சாலை வேலைக்காரன் நற்குணங்களால் முன்னேறினன். தான் வளர்வதற்கென்ற நோக்கமுடைய நற்செயல் சிறியதேயாயினும் நற்செயலே யல்லவா? இப்பொழுது வெற்றிப் புலவர் சொல்லிவைப்பது என்ன? வளர்ச்சிக்கு அஸ்திவாரம் நற்குண நற்செயல்கள் அல்ல, அயோக்கியத்தனம் என்பதாம்.

(முற்றிற்று)

K. இராஜகோபாலன்.

மலர்வனம்.

கிள்ளைக் கல்வி.

அன்னவாறு, அன்பர்நவின்ற மொழியினதற்றங் காத்திலாக் கிளி இரண்டு, இலக்கியம் வளர் மலர் வனத்திலே கண்டுளோம். ஒன்று சோணாட்டுச் சுகம். ஊடிய மாதருக்கு வாயிலாய்ப் பாடிய சயங்கொண்டார்,

> நேயக் கலவி மயக்கத்தே
> நிகழ்ந்த மொழியைக் கிளியுரைப்ப
> வாயைப் புதைக்கு மடநல்லீர்
> மணிப்பொற் கபாடந் திறமினோ.

[அன்போடியன்ற புணர்ச்சி மயக்கத்தினால் உமக்கும் உமது கொழுநர்க்கும் நிகழ்ந்த ஆர்வமொழிகளைக் கேட்டிருந்த கிளி அதனைப் பல்லோரறிய விளம்பவே, வெட்கம் மேலிட்டு அதன் வாயைப் பொத்தியடக்கும் மாதர்காள், ஊடல்தீர்ந்து, காத்திருக்கும் நும் நாயகரை உள்விட, இரத்தின மிழைத்த பொன் கதவைத் திறவுங்கள்.]

இவ்வம்புக் கிளி வாய்திறக்கவே பாவம் இவள் தன் வாயைப்புதைத்துச் சாடை காட்டிக்காட்டி அது அடங்குமோவெனப் பார்த்திருப்பாள். அறிந்தும் அச்செயல் ஒழித்திருக்காது அக்கள்ளக் கிளி. அதன்மேல், 'நாணமோ கெட்டது, அதன் நாவையேனு மடக்குவோ' மெனப் பறவையின் வாயைப் பொத்தி நிற்க, அங்கிருந்தோர் தம்முள் புன்னகைத் தூதுபோக்கி அசதிச்சொல் பேசுங்கால் இவள்நிலை என்னும். பைங்கிளி பூவையென்னும் மாண்பிலாதாரை வைத்தார் என்னுரு ரென நோதற் கொத்தவள் இலக்கணையல்லள், இந்நங்கையே.

இச் சோழநாட்டுச் சுந்தரிக் கிணையாய நாணமிலை கிள்ளையால் எய்தியவள் அவளது நிடத நாட்டுச் சகோதரியும் ஒருத்தி உளள். அவளைப் பார்த்தவன் அதிவீரராம பாண்டியன்.

> உள்ள மொன்றுதங் காதல ரோதிய
> கள்ள நேயக் கலவியின் வாய்மையை
> வள்ள வாயமு துண்டு வளர்மடக்
> கிள்ளை மெல்லக் கிளத்தலு நாணுவாள்.

[மனதிலே ஒன்றும் தங்காது வம்புபேசும் கிளியானது, காதலர் மறைவிலே நேயமாகக் கலந்து குலவிய சொற்களை, இவள் தனக்குக் கிண்ணத்தில் அமுதூட்டி வளர்ப்பவளாயிற்றே என்றும் நினையாது, மெல்லச் சொல்லவும் நாணம் கொள்ளுவாள்.]

இப்படித் தமக்குப் பலவிதத்திலும் சதிசெய்யும் பறவையைப் பாலூட்டி வளர்த்த மாதர் மதி கெட்டாரல்லர். குணநாடிக் 'குற்றமுநாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொண்டுளர். காதற் செய்தியில் பைங்கிளி அவர்களுக்குப் புரியுமுதவி சிறிதல. காதல் மீதூர நின்ற ஒருத்தி அதற்குரிய அன்பன் அயலில்லாதிருப்பதால் விளையும் ஆற்றாமையைக் கிளி செயும் நலத்தினாற் சிறிது தேறுதலுங்கூடும். எவ்வாறெனின், அயோத்திமா நகருறையணங்கொருத்தி மதுவொடு காமத்தாலு மயங்கியனளாய்க் கொழுநன் அருகே இல்லாதேங்க.......அவளுக் குற்றதைக் கம்பர் கூறுவார்:—

> விரைசெய்பூஞ் சேக்கையின் தெப்ப மீமிசை
> கரைசெயா வாசையங் கடலு ளாளொரு
> பிரசமென் குதலையாள் கொழுநன் பேரெலாம்
> உரைசெயுங் கிள்ளையை யுவந்து புல்லினாள்.

[கரையிலா ஆசையென்னுங் கடலில், வாசனைவீசும் மலர்ப்பள்ளியென்னும் தெப்பத்தின் மீதிருக்கும், தேன் போன்ற குதலைச் சொல்லுடைய ஒருத்தி, தான் தன் நாயகனுக்கு இட்டழைக்கும் பேர்களையெல்லாம் சொல்லும் கிளியை உவகையோடு தன் மார்பகம் தழுவினாள்.]

பந்தாட்ட மாடுவதில் மிக்க ஆர்வமுள்ள வாலிபர், இருள் மழை போன்ற இடையூறுகள் புகுந்து அவ்வாட்டத்தை விலக்குமாயின், ஆடுதற்கு அடுத்தபடி ஊக்கமும் உவகையும் அதனைப்பற்றிப் பேசுதலால் பெறக் கண்டுளோம். அத்தகையது இந்நங்கையின் செய்கையும். உடன்கூடாக் கணவனின் பேரினைப் பேசக் கேட்டேனும் ஒரு சிறிது பரிவு தீருமாறு புரிகின்றது இப்பைங்கிளி.

வாயினால் பேரைக்கூவி வாளா இருப்பதுடன் கிளிகள் செயல் முற்றுறாது. தந்தலைவியின் செவ்விநோக்கித் தாமே தலைவன்பால் தூதுசென்று அவனை அழைத்து வருதலும் தத்தை ஆற்றவேண்டிய செஞ்சோற்றுக் கடன்களுள் ஒன்று. இதனை மறந்தது ஓர் மந்தக்கிளி.

> மன்றலொ ரொருசிறை யிருந்தோர் வாணுதல்
> தன்றுணைக் கிள்ளையைத் தழீஇயென் னாவியை
> இன்றுபோய்க் கொணர்கிலை யென்செய் தாயெனக்
> கன்றிலோ டொத்தியென் றழுது சீறினாள்.

[வாசனைகமழும் இடத்திருந்த வொரு ஒளிபொருந்திய நெற்றியையுடையவள், தன் துணையான கிளியைத் தழுவிக்கொண்டு, "வழக்கம்போல் இன்றைக்கும் எனதுயிராய நாயகனை நீபோய் அழைத்துவராமலிருக்கின்றாய். இனி உன்னைக் கிளி என்பதாகாது, காமத்தைக் கனற்றும் அன்றிற் பறவைக்கே நிகராய் விட்டனை" என்று அழுது சீறினாள்.]

தாம் செய்யும் கருமம் இவையெனத் தெரிந்து கிளிகள் இவ்வாறு உதவி செய்வதன்றியும் அவைகளை வெறும் கருவியாய் ஊடல் தீர்வதற்கு உபயோகப்படுத்திக்கொண்ட மாதரும் உளர். ஒருத்தி,

> யாமொழக்குஞ்சொற் பொன்னனை யாளோரிகன்மன்னன்
> தாழத் தாழா டாழ்ந்த மனத்தா டளர்கின்றாள்
> ஆழத் துள்ளுங் கள்ள நினைப்பா ளவனின்ற
> சூழற் கேதன் கிள்ளையை யேவித் தொடர்வாளே.

[யாழினது நாதத்தை ஒக்கும் சொல்லுடைய இலக்குமியைப் போன்றவள், வலிமைவாய்ந்த அவள்நாயகன் இவள் கொண்ட ஊடலைத் தணிப்பதற்காகக் காலில் விழுந்தபோதும் மனம் இரங்காதவளாகி, அவன் அகன்றபின், வணங்கிய சமயத்தைப் பயன் படுத்திக் கொண்டு ஊடல் தீராது கழிந்த தன் மதியீனத்திற்கு மனந்தளர்ந்து, மறுபடி அவனை எவ்வாறு அடைவதென்று சிந்திக்கவே, அவளது நெஞ்சின் ஆழத்திலே ஒருதந்திரம் தோன்றித் துள்ளுபவளாய்த் தன் கையிலிருந்த கிளியை அவன் நின்றிருந்த இடம் நோக்கிப் பறக்க விட்டுவிட்டு, அங்குச் சென்றால் பின்னுமோர் முறை அவன் தன்னை ஊடல் தீர வேண்டுவான் என உன்னி, அக்கிளியைத் தொடர்பவள் போல் அவனிடத்திற்குச் செல்வாள்.]

இன்னபல நலங்கள் கிளிகளால் தமக்கு இருப்பதாலன்றோ ஒவ்வொரு வேளை அவைசெய்யும் வஞ்சனையையும் பொறுத்து, மாதரார் பாலூட்டி வளர்த்துப் பாராட்டுகின்றனர். எனினும், கிளிகளின் சார்புநின்று சிந்தித்தால் ஓர் சங்கை ஏற்படலாம். அவைதாம் ஏன் பறந்தகன்று போய்விடாமல் இம்மெல்லியல் மங்கைமார்க்கு அடிமைபூண்டு சிறைவைகித் தங்குகின்றன? சுயேச்சைத் தாகம் முற்றிலும் அற்றதோ அவைபால். பொன்செய் வள்ளத்தில் தீம்பால் அடிசில் இவர் மலர்க்கரமிருந்து அருந்துகின்ற ஆசைக்கோ, தண்ணறுஞ் சோலையில் தேமாங்கனியையும் செங்கதலிப் பழத்தையும் தாமே தம்மினச் சேர்க்கையோடு கொந்திக்கொந்தி நுகர்ந்து தெங்கின் உயர் பச்சிலை ஊசலிலமரப் பவனத்திறைவனேஒய்யெனக் கூடய்த் தாலாட்டப் பைஞ்சிறை உளரிய தஞ்செவ்வலகினைச் செருகி வைகலும் வைகுமச் செல்வத்துறந்து, போற்றுவ தொருபோதும் அற்றவ் தொருபோதுமாய் வளர்க்கு மிவ்வனிதையர் ஏவலைப் பூண்டுழல இசைந்தன இப்பேதைக்கிளிகள், எனின் அன்று. அவைகளும் குணதோஷம் நாடி ஏற்றனசெய்யும் மதியாற்றலுடையவே. ஐயம்புகினும் கற்கைநன்றெனும் நேர்மையை இப்பறவைகளின்திறம் தேர்ந்தாரிலர். தெரிவையர் அருளும் சொற்களின் அழகைத் தாம் ஓதிப் பயிலுவான் வந்திவர்களை அடைந்து வாழ்வன அவை. ஒட்டினும் ஓடா. வெண்பாப்புலி வேலுசாமி பிள்ளையைப் பற்றிக் கேள்வி யுண்டோ, நண்பர்காள், நுந்தமக்கு? அவர் 'கந்தபுராண வெண்பா' வென ஐயாயிரத்தறுநூற்றறு பத்தைந்து வெண்பாக்களினால்பெருங் காப்பிய மொன்று பாடியுள்ளார். அந்நூல் பிரசுரமாகாததால் படித்திருக்க மாட்டீர். குறிஞ்சித்திணை வருணனையில் அப்புலவர் கிளியின் நோக்கமும் தன்மையும் ஈதெனக் காட்டக் காண்மின்.

> அங்கணி தன் மேவிமணி யாங்கல் கவண்வைத் துக்
> கொங்கண் குயர்தானங்கக் கூர்சினத்திற் —பைங்
> [கிளிகள்
> வன்சொற் கொடுகடிந்து மற்றவைபோய் மீளுமன்றே
> ரின்சொற் பயில்வா னினிது.

[அங்குப் பாண்களில் ஏறி மணிகளைக் கல்லாகக் கவணிலே வைத்துத் திரண்ட கண்களையுடைய தம் கொங்கைகள் விளங்கும்படி சுழற்றிக் கோபத்தோடு வைது மாதர் கிளிகளை எறிந்து ஓட்டவும், அவை ஓட்டும் போது ஓடினாலும் உடனே அவர்களது இனிய சொற்களைக் கற்பதற்காக மீண்டு வரும்]

ஈதன்றோ மாணவற்கழகு. தன்னத்தன்ன மேல் வீழ்ந்து வசைச்சொல் வருமென்றும் பாராது வாய்மையைக் கற்பார் கருத்துடைய மாணவர். ஆம். ஆசிரியரும் அணங்கனார் ஆதல் வேண்டுமோ! "மதுகரம்."

கம்பராமாயணம்

பால காண்டம்

5. திருவவதாரப் படலம்.

(437-வது பக்கத் தொடர்ச்சி)

முனிவரு முழுகுவ ரழகேனு நினைவினில்.

அரக்கரின் கொடுமைக் காற்று தலமரு மமரர்நாள் புரந்தரு ளெம்மை யென்னப் போற்றவே அந்தக் காலை நிரந்தர மூலகிற் கெல்லாம் நிலையென நின்ற மாயோன் வரந்தரு மொழிகள் கேட்ட வசிட்டனு மறப்பனோ தான். சிறப்பமை சொற்களேற்ற முனிவரன் சிந்தை தன்னில் உறைவதுபோன்றே நாமும் அவன்வயின் உற்று நண்ணி முறைமையின் கேட்பினப்பால் முற்றிய மனத்தாகி மறக்கினு மறக்கலாற்றாத் தன்மையராவோம், திண்ணம்.

பொன்னரிப் பீடமேல் பொலிந்து தோன்றிய எம்பெருமான் இமையவர் உரைத்த யாவும் செவிசாய்த்துச் சிந்தையுட் கொண்டனன். சொல்லிற்குச் சொல் எதிர் வினவினா னல்லன். வியப்பேனும் சினமேனும் உற்ற மெய்ப்பாடுகள் அவன்பால் விளைந்தில. ஆர அமர்ந்து கேட்டு அருள்நிறைந்த கண்களால் அவர்களை நோக்கினான். நோக்கிச் செய்யும் வகையிலேனும் அதனைத் தானாற்றுந் திறத்திலேனும் சிறிதளவு சந்தேகமுமின்றி,

> மசரத மனையவர் வாழும் வாழ்வுமோர்
> நிசரத கணைகளா னீறு செய்யயாம்
> கசரத துரகமாக் கடல்கொள் காவலன்
> தசரதன் மதலையாய் வருதுந் தாரணி.

[கானல் நீர்போன்ற பொய்நிலை நிற்கும் அவ்வரக்கர்கள் பெற்றுள்ள வரங்களையும் வாழ்வையும், சத்தியத்தையே தன் சாரமாக உடைய அம்பு ஒன்றினால் சாம்பராக்க, நாம் பூலோகத்தில், ரதகசதுரக பதாதி எனும் சேனாபலம் கடலளவு கொண்ட வேந்தனும் தசரதனின் புத்திரனாக அவதரிப்போம்]

என்று, கம்பீரமெனுந் தன்மையே மொழியுருப் பெற்றாலென்ன, இயம்பினான்.

இவ்வாசகத்தின் பெருமையைச் செய்யுள் படிக்கும் கண்கள் காணா. பதம் பிரிவ தெங்ஙனமெனும் கவலையோடு முதல்தாம் ஓதும் வாயும் அப்பெருமையை ஓர்ந்திடாது. மனப்பாடஞ் செய்துகொண்டு உண்ணுங் காலையும் உலவுங்காலையும் ஓதி ஓதி உன்னுவார் உள்ளத்தே உதயமாம் அதன்நயம். ஆதிமூலமே ஓதிய மொழிகளன்றோ அவை. கம்பர் கட்டிய செய்யுளென்று எண்ண வேண்டா. வசிட்டன் வளர்த்த வாக்கியமுமன்று. செவ்வாய் முகந்தனே செப்பிய மொழியினை முனிவன் செவியுற்றபோது நம் கவிஞர்பிரான் அயலே நின்று ஒற்று ஒற்றிப்பெற்றனராய் ஈண்டெடுத்துஇயம்புகின்றார்.

பொய்யெனப் படுவது, ஐம்பெரும் பூதமும் அலகிலாவண்டமும் அதனுள சர அசர பேதமான யாவையும், இயக்கும் சக்திகளும் இயங்கும் பொருளும் அனைத்தும், அவ்வாதியந்தமற்ற பரம் பொருளின் ரூபமே என்னும் நினைவை விட்டு விவகரித்தலாம். அரக்கர் இதனை அறிந்தவரேனும் வாழ்க்கையில் கலந்திலர். இந்நினைவு கலவா வாழ்க்கை யாவும் செல்வமும் ஆற்றலும் உடையனவாய்த் தோன்றிய போதிலும் கானல்நீரைப் போன்று உருவமிருந்தும் பொருளில்லாதனவே யாம். ஆதலின் அரக்கர் மசரத மனையவராயினர். அவர்களால் விளையும் தீமையை ஒழிப்பதற்கு இருக்கின்ற சாதனம் ஒன்றே, அதுதான் சத்தியம். பொய்வாழ்க்கை நடத்துகின்றவர்களால் பிறர்க்கு ஏற்படும் துன்பத்தை விலக்க வேண்டுமாயின், அப் பொய்யினிற்கு எதிராய்ப் பொய்யிழைத்துப் பயனில்லை. பொய்யைப் பொய்யி

ஞல் விலக்கவேனும் வெல்லவேனும் இயலாது. தீயைத் தீயினுல் அவிக்க முயல்கின்ற மதியொக்கும் இது. தேக வலியும் படைபலமும் கொண்டு அவ்வரக்கர் புரியும் தீமையை ஒருபோதும் அடக்கமுடியாது என்பதைக் காட்டவே, "கசரததுரகமாக் கடல்கொள் காவலன் தசரதன் மதலையாய் வருதும்" என எம்பெருமான், இத்துணைச் சைனியங்கள் உடைய தயாதனுக்கு மகனுய்ப் பிறந்தும் அதனைத் தான் உபயோகப்படுத்திக் கொள்ளப் போவதில்லை என்பது தோன்ற "நிசரத கணைகளால் நீறுசெய்ய" என்று இக்கருமத்திற்கு ஏற்ற கருவி தான் கையாளப் போவதை ஐயமின்றிச் செப்புகின்ருர். மெய்ம்மையே பொய்யினைப் புறங்கொடுத் தோடச் செய்யும். வால்மீகி முனிவர் "இராமம் ஸத்ய பராக்ரமம்" எனக் குறிக்கும் வாசகத்தின் தத்துவமும் இன்னதே. திருமாலிங்குச் சொன்னவுரை மறக்காமல், அவர் இராமனுய் அவதரித்துப் பிறப்பெடுத்த கருமத்தைத் துவக்குதற்கு முதல்முதல் விச்வாமித்திர முனிவனுடன் புறப்பட்டபோது கம்பர் கூறுவார்:—

> வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
> என்றுந் தேய்வுருத் தூணி யார்த்திரு
> குன்றம் போன்றுயர் தோளிற் கொற்றவில்
> ஒன்றுந் தாங்கினு னுலகந் தாங்கினுன்.

[வெற்றிதரும் வாளைப் பக்கத்தில் கட்டி, சத்தியத்தைப்போல் ஒருநாளும் குறையாத அம்புருத் தூணியைக் குன்றுபோல உயர்ந்த தோள்களின் ஒன்றில் கட்டிக்கொண்டு மற்றத் தோளில் ஜயதனுசு ஒன்றும் தாங்கினுன்—யாவனெனில், உலகத்தைத் தாங்குபவனுகிய எம்பெருமான்]

நிசத்தை இரசமாக உடைய கணையென்று முன் சொன்னதற் கேற்ப இங்குத் தூணியையே மெய்ம்மை என்பதால் அக்கணை தோய்ந்திருக்கும் பாத்திரத்தின் தன்மை விளங்குவதாயிற்று. மெய்ம்மைபோல் தேய்வுருத்தூணி, என்பதால் சத்தியத்தின் ஆற்றல் மாத்திரமல்லாமல் அதன் அலகின்றி உலவா மேன்மை உற்று நோக்குவார்க்குப் புலப்படும். கல்வியேபோல் மெய்ம்மையும் எடுக்கவும் கொடுக்கவும் குறையாதாகையால் அவையிரண்டும் ஒரேபடி உத்தம தத்துவங்கள் என்பது யாவர் மனத்திலும் எழும்.

இனி, மேல் நடந்தன பார்ப்போம்.

> ஈதுமுன் னிகழ்ந்த வண்ண
> மெனமுனி யிதயத் தெண்ணி
> மாதிரம் பொருத திண்டோண்
> மன்னநீ வருந்தே லேழேழ்
> பூதல முழுதுங் காக்கும்
> புதல்வரை யளிக்கும் வேள்வி
> தீதற முயலி னைய
> சிந்தைநோய் தீரு மென்ருன்.

[முன்னே நிகழ்ந்த விதம் இதுவென்று வசிட்டமுனிவன் தன் மனதிலே யெண்ணிப் பிறகு தயரதனைப் பார்த்து, "திக்குக்கள் தோறும் தேர் செலுத்தி வென்ற திண்ணிய தோள்களையுடைய அரசனே, நீ வருந்த வேண்டா, இப்பூவுலகு ஒன்று கிடக்க, ஏழேழு உலகங்களையும் காக்கவல்ல புதல்வரைத் தருதற்கொத்த யாகத்தை நீ நன்கனம் முயன்ருல், ஐயனே, உன் மன வருத்தம் தீர்ந்திடும்" என்ருன்]

> என்னமா முனிவன் கூற
> வெழுந்தபே ருவகை பொங்க
> மன்னவர் மன்ன னந்த
> மாமுனி சரணஞ் சூடி
> உன்னையே புகல்புக் கேனுக்
> குறுகண்வந் தடைவ துண்டோ
> அன்னதற் கடியேன் செய்யும்
> பணியினி தளித்தி யென்ருன்.

உடைமையாற் பெரியோர், ஒன்று மின்றித் துறந்தார் தமக்குத் தாழ்ந்தவரே யாவராதலால் தயரதன் அம்மா முனிவனது சரணங்களை எடுத்துத் தன் சிரமேற் சூடினுன். இக்கருத்தினைத் தோலாமொழித் தேவர் சூளாமணியுள் குளிர்ந்த சொற்களால்,

> "அடிநிழ லரசரை யளிக்கு மாய்கதிர்
> முடிநிழல் முனிவரர் சரண மூழ்குமே"

[தன் காலின் நிழலால் மற்ற அரசரையும் அளிக்கின்ற மன்னவனது கிரீடத்தின் ஒளியானது முனிசிரேஷ்டர்களுடைய பாதத்தின் கீழே கிடக்கும்]

என்று, வேந்தர்களால் பணியப்படுகின்ற சக்ரவர்த்தியும் முனிவர்களைப் பணிகின்றவனுவான் எனக் காட்டியிருப்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

இதைக்கேட்ட வசிட்டன், 'கலைக்கோட்டு மகாமுனி வந்து புத்திரகாமேட்டி யாகத்தைச் செய்துவைத்தால் தனயர் பிறப்பர்' என்று இயம்பவே, தயரதன் அம்முனிவன் வருதற்குத்தான் யாது புரிதல்வேண்டுமென வினவ, வசிட்டன், அக்காலம் கலைக்கோட்டுமுனி உரோமபத நாட்டில் இருப்பதையும் அங்கு அவன் செல்லநேர்ந்த செய்தியையும் தயரதனிற்குச் சொல்லாநின்ருன்.

திருவவதாரப் படலத்தின் இப்பாகம், கம்பர் இடையிடைச் சிறுகதை சொல்லும் செம்மையை இனிமையாய்க் காட்டுகின்றது. நூலின்கண் அதனை யாவரும் எளிதில ஓதிக் கொள்ளலா மாதலால் இங்குக் கூறுவது மிகை. எனினும் அதனில் ஒன்றிரண்டு வருணனை உரையாம லகல மனம் வரவில்லை வசிட்டனுக்கும் விச்வாமித்தரனுக்குமே அவ்வருணனையில் மனம் மூழ்கியதெனில் வேறு என்!

மழையிலாது மன்னுயிர் வருந்தக்கண்ட உரோமபதன் மனமாழ்கி வேதியரை யாது செய்வதெனக்கேட்க அவர் கலைக்கோட்டு முனி வரின் வான் சொரியுமென்றனர். அதுகேட்ட உரோமபதன், மனிதரை விலங்குகள் என்று எண்ணும் அம்முனிவரைக் காட்டினின்று கனதூரிற்குள் எவ்வாறு கொண்டுவருவது என யோசிக்கும் வேளையில், 'நாங்கள்போய் அழைத்து வருவோம்' என எழுந்த கணிகையரை வசிட்டன்,

> "சோதிநுதற் கருநெடுங்கட் டுவரிதழ்வாய்த்
> தாளநகைத் துணைமென் கொங்கை மாதர்"

[பிரகாசம் பொருந்திய நெற்றியும், கரியபெரிய கண்களும், பவளம்போன்ற சிவந்த உதடுகளுடைய வாயையும், முத்தைப்போன்ற பற்களையும், மெல்லிய கொங்கைகள் இரண்டும் உடைய மாதர்]

எனத் தன் சொற்கொண்டு சித்தரிப்பான். 'அவ்வாறே சென்று அழைத்து வாருங்கள்' என வழுகின்ற உரோமபதனும் அவர்களை

> "பனிப்பிறையைப்
> பழித்தநுதற் பணைத்த வேய்த்தோள்
> வங்குமிடைத் தடித்தமுலை யிருண்டகுழல்
> மருண்டவிழி யிலவச் செவ்வாய்ப்
> பூங்கொடியீர்"

[குளிர்ந்த பிறையை வென்ற நெற்றியையும், பருத்த மூங்கில் போன்ற தோள்களையும், துவள்கின்ற இடுப்பையும், தடித்த முலையையும். இருண்ட கூந்தலையும், மருண்ட பார்வையையும், இலவம்பூவைப் போன்ற சிவந்த வாயையும்உடைய பூங்கொடி யொன்றிருக்குமாயின் அதனைப்போன்ற உருவத்தையுடையவர்களே]

என்று அழைப்பதாக வசிட்டன் மீண்டும் கூறுவான்.

அக்கணிகையர்பால் காமமுற்று வசிஷ்டனேனும், அவனை அவ்வாறு சொல்விக்கின்ற கம்பனேனும் இத்துணை நயமொழிகள் பாராட்டுகின்றனரென எண்ணிற் பிழையாம் அழகிலே ஈடுபட்ட வுள்ளம அதனை நினைக்குமிடத்துச் செயலும் பயனும் தொடர்ந்துடன் நோக்காமல் மூழ்கிவிடும். இதே நிகழ்ச்சியைப பின் குலமுறைகிளத்து படலத்தில், ஜனகனுக்கு எடுத்தோதுகின்ற விச்வாமித்திரனும் இக்கணிகையரை,

> சிலைக்கோட்டு நுதற்குதலைச் செங்கனிவாய்க்கரு
> [நெடுங்கண்
> விலைக்கோட்டும் பேரல்குன் மின்னுடங்கு மிடையார்.

[வில்லைப்போல் வளைந்த நெற்றியும், சிவந்த கொவ்வைக்கனி போன்றதும் குதலைமொழி மிழற்றுகின்றதுமான வாயும், கரியபெரிய கண்ணையும், விலைக்கு விற்கும் பெரிய அல்குலையும் மின்னலைப்போல் துவளும் இடுப்பையும் உடையவர்]

என்று வருணிப்பதற்கும் காரணம் அதுவே.

T. N. சேஷாசலம்.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM" 189806.

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

ASTHMA

இரைப்பு காசத்துக்குக் கைகண்டது
அநேக நற்சாக்ஷிகளும் தங்கமெடல்களும்
பரிசுபெற்ற உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்து.

சித்த குரு பஸ்பம்

ஶ்வாச குடாரி லேகியம்

இரைப்பு, காசம், க்ஷயம் ரத்தகாசம் முதலியவைகளை வேருடன் தொலைத்து மறுபடியும் வராமல் செய்யும்.

வியாதிகளை விபரமாக எழுதவும்.

25 நாள் மருந்து ரூ. 8. 10 நாள் மருந்து ரூ. 4.

கேட்லாக்கு இனமாக அனுப்பப்படும்:—

நற்சாக்ஷிப் பத்திரம்.

நீடித்த இரைப்பு Chronic Asthma (13years old)

மிஸ்டர் வி. ஆர் ஜோசப், F. M. S. நான் கடந்த 13 வருஷங்களாக இரைப்பு காசத்தால் சொல்ல முடியாத உபாதைகள் அனுபவித்துக்கடைசியாக டாக்டர் வைத்திய பூபதி கோட்டா ஜெயராம் நாயுடுவின் "ஆஸ்தமா ஸ்பெஸிபிக்" (Asthma Specific) என்னும் மருந்தால் சுகமடைந்தேன், என்று எழுதுகிருர்.

HEALING BY POST:—

எல்லா வியாதிகளுக்கும் தபால் மூலமாகமருந்துகள் அனுப்பி சொஸ்தப்படுததுவோம்

விலாசம் :— வைத்திய பூபதி,

டாக்டர் கோட்டா ஜயராம் நாயுடு,

ஆந்திர ஆயுர்வேடிக் பார்மஸி லிமிடெட்

(பிராஞ்சு) 159, பிராட்வே, மதராஸ்.

ஆநந்த குணபோதினி

மூன்ரும் வருடம்

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவந்ததில்லை. இது சிறந்த வழியில் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை. 5000 சந்தாதாரர்கள்.

வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-4.

"ஆநந்த குணபோதினி" ஆபீஸ்,

302, தங்கசாலை வீதி, சென்னை.

9-ம் பதிப்பு! 9-ம் பதிப்பு!!

வெளி வந்துவிட்டது

ஆங்கில ஆசான்

தமிழ் நாட்டில் சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினுயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், முதன் முதல் வெளிவந்ததும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் இதுவே. எமது இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட் மார்க் இருக்கிறதாவென்று கவனித்துப் புத்தகம் வாங்குங்கள்.

800-பக்கம்

முழு காலிகோ பயிண்டு

விலை ரூ. 2-0-0.

தபால் சார்ஜ் பிரத்யேகம்

தி. இராஜகோபால் முதலியார்,

302, தங்கசாலைத் தெரு, சென்னை.

கம்பராமாயணம்
பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறுது போய்விடுவர் ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்கிரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலாநிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

ஏமாங்கதத்
திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலாநிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture
by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being. The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்

கோவாவில் இந்துமதப் பிரசாரம்:—டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான கோவாவில் இந்துமதப் பிரசாரர்களின் முயற்சியால் இதுவரை 6000 கிறிஸ்தவர்கள் இந்துக்களாக மாறினர் என்று கோவாவிற்குச் சென்று திரும்பிய டாக்டர் மூஞ்சே கூறுகிறார்.

***

மைசூரில் கதர்:—மைசூர் அரசாங்கத்தார் போலீசிலும் கலால் இலாகாவிலும் கதர் உடையை உபயோகிக்குமாறு உத்திரவிட்டிருக்கின்றனர். மைசூரில் சமஸ்தான ஆதரவில் நடக்கும் நூற்போர் சங்கத்தாரிடமிருந்து கதர்கள் வாங்கப்படும் என்று தெரிகிறது.

***

ஸ்ரீ பட்டேல்:—இந்தியச் சட்டசபைத் தலைவரான ஸ்ரீபட்டேல் பர்தோலி சத்தியாக்கிரஹிகளின் நிலையைக் கண்டு வருந்தி மாதம் ஒன்றுக்கு 1000 ரூபாய் தருவதாகக் காந்தி அடிகளுக்குக் கடிதம் விடுத்துள்ளார். இந்நிலைக்கு முடிவொன்று காணத் தம்மால் கூடியவிரையில் முயல்வதாகவும் அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

***

புதிய கவர்னர்:—இப்பொழுது பம்பாய் கவர்னராயிருக்கும் ஸர் லெஸ்லி வில்ஸனுக்கு உத்தியோககாலம் முடியப்போவதால் புதியகவர்னர் நியமனஞ்செய்யப்படும் என்றும், அப்பதவிக்குப் பார்லிமெண்டு அங்கத்தினரான ஸர். பிரிடரிக் ஸைக்ஸ் நியமிக்கப்படலாம் என்றும் டெயிலிமெயில் பத்திரிகையின் லண்டன் நிருபர்கூறுகிறார்.

***

அரசர் பிறந்த நாள்:—ஜியார்ஜ் மன்னர் பிறந்த தினத்தை யொட்டிப் பலருக்குப் பட்டங்கள் அளிக்கப்பட்டன. சென்னையில், ஜெனரல் ஆஸ்பத்திரி மேற்பார்வை உத்தியோகஸ்தரான C. பிராட் பீல்டுக்கு, C. I. E. பட்டமும், நிர்வாகசபை அங்கத்தினரான ஊஸ்மான் சாஹிப்புக்கு ஸர் பட்டமும் கிடைத்துளது. திவான்பகதூர், கான்சாகிப், ராவ்பகதூர் பட்டங்களும் பலர் பெற்றுள்ளார். ஸர் ஜான் ஸைமனிற்கு லார்ட் பதவி கிடைத்துளது.

***

சட்டசபை அங்கத்தினர் ராஜிநாமா:—பர்தோலியில் பம்பாய் அரசாங்கத்தார் கையாளும் அடக்குமுறையைத் தாங்கள் விரும்பவில்லை என்பதைத் தெரிவிக்கும் பொருட்டு, ஸ்ரீமான்களான K. F. நாரிமன், நாராயணதாஸ் ஆனந்தஜி, லலுபாய் தேசாய், ஆகிய மூவரும் பம்பாய்ச் சட்டசபையில் தாங்கள் வகித்த அங்கத்தினர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டனர் என்று பம்பாய்ச் செய்தி கூறுகிறது.

***

கானடாவிற்குக் குடியேற்றம்:—பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் கானடா அரசாங்கத்தாரும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி இங்கிலாந்திலிருந்து 3000 குடும்பங்கள் கானடாவிற்குச் செல்லுமாம். இந்த 3000 குடும்பத்தாரில் 1700 பேர் விவசாயிகள் என்றும், 370 பேர் வியாபாரிகள் என்றும், 263 சாதாரணத் தொழிலாளிகள் என்றும் 553 பேர் சுரங்கவேலைக் காரர்கள் என்றும் தெரிகிறது.

***

ஸ்ரீ பெஸண்டின் ஐரோப்பிய பிரயாணம்:—ஐரோப்பா செல்லவிருக்கும் அன்னி பெஸண்டம்மையாரைப் பத்திரிகை நிருபர் கண்டு பேசியபொழுது அவர் கூறியதாவது:— "இந்தியாவின் நலத்தை யொட்டியே நான் ஐரோப்பா செல்கிறேன். இது சமயம் இந்தியாவைப்பற்றி ஆங்கிலேயர் அதிகக் கவலை கொண்டிருக்கின்றனர். இந்திய விடுதலைக்குப் பிரிட்டிஷ் மக்களிடம் ஊக்கம் உண்டாக்கவேண்டும். பிரிட்டிஷ் தொழிற்கட்சியார் இந்திய அரசியல் திருத்தவிஷயமாகக் கொண்டுள்ள மனநிலையை அறிதல் அவசியமாகும். மாக்டொனால்டு தவிர மற்றத் தொழில் கட்சியினர் இந்தியாவினிடம் அதிக அனுதாபங்கொண்டிருக்கின்றனர் என்றே எண்ணுகின்றேன். எனவே இங்கிலாந்தில் தேவையானதைச் செய்யவே செல்கிறேன்."

***

பர்தோலி சத்தியாக்கிரஹமும் கவர்ன்மெண்டார் அறிக்கையும்:— பர்தோலி சத்தியாக் கிரஹத்தைப் பற்றி பம்பாய் அரசாங்கத்தார் விடுத்த அறிக்கை வருமாறு:— அரசாங்கத்தார் தீர ஆலோசித்தே வரிவிகிதத்தை நிர்ணயித்தனர். வரி கொடா இயக்கத்தில் கலந்துகொள்வதால் குடிகளுக்கு நன்மையொன்றும் ஏற்படாது. இதுவரையில் 1400 ஏகர் நிலம் பறிமுதல் செய்யப்பட்டு ஏலம்போடப்பட்டுள்ளது. இனியும் ஜனங்கள் வரிகொடுக்க மறுத்தால் பாக்கியாயிருக்கும் 5000 ஏகரும் இப்படியே பறிமுதல் செய்யப்படும். பறிமுதல் செய்யப்பட்ட நிலம் மறுபடியும் ஒருக்காலும் சொந்தக்காரருக்குக் கிடைக்காது. நிலங்களை வாங்கிக்கொள்ளப் பலர் அரசாங்கத்திற்கு மனுசெய்து கொண்டிருக்கின்றனர். எனவே இனியாவது ஜனங்கள் வரிப்பணத்தைக் கொடுத்து விடுவார்கள் என்று அரசாங்கத்தார் நினைக்கின்றனர். பலர் வரியைக் கொடுத்துவிடவும் நினைக்கலாம். அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவே, நடவடிக்கைகள் நிறுத்தப்பட் டிருக்கின்றன.

***

மைசூர் காங்கிரஸ்:—மைசூர் சமஸ்தானக் குடிகள் முதலாவது காங்கிரஸ் மேமாதம், 29-ந் தேதியன்று ஸ்ரீமான் மாணிக்கவேலு முதலியார் தலைமையில் கூடிற்று. ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி ஐயர் காங்கிரஸைத் திறந்துவைத்தார். அப்பொழுது அவர் கூறியதாவது:—

"ஜனங்களிடம் ஜனநாயக உணர்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காண நான் மகிழ்ச்சியடைகிறேன். சமீபத்தில், ஸர். லெஸ்லி ஸ்காட் தயாரித்த திட்டத்தை அரசாங்கத்தார் ஏற்க மறுத்தது புகழ்ச்சிக்குரியதே. மைசூரில் இந்துக்களும் முகமதியர்களும் ஒத்து வாழவேண்டும். பிரிட்டிஷ் இந்தியாவில் இந்து முஸ்லிம் சச்சரவு ஏற்படுவதற்குக் காரணம் அன்னிய ஆட்சியேயாகும். மைசூர் மன்னரின் கீழ் பொறுப்பாட்சி ஏற்படும்வகையில் ஜனங்கள் பாடுபடவேண்டும்"

தலைவர் கைத்தொழில் அபிவிர்த்திக்காகவும், வர்த்தகப் பெருக்கத்திற்காகவும் இக்காங்கிரஸ் சிறப்பாய் உழைக்கவேண்டுமென்று கூறினர்.

வழக்கப்படி தீர்மானங்கள் பல செய்துகொண்டபின் கூட்டங் கலைந்தது.

***

வரிகொடா இயக்கமும் காந்தியடிகளும்:—காந்தியடிகள் யங் இந்தியாவில் எழுதுகிறார்:—"பர்தோலியில் நடக்கும் இயக்கமும், அரசாங்கத்தார் கையாளும் முறைகளும், பர்தோலி ஜனங்களுக்கு ஒரு சோதனை யென்றே கருதுகிறேன். கவர்ன்மெண்டார் தங்கள் செல்வாக்கோ வருமானமோ போவதாயின் உடனே அவர்கள் நியாயம் அநியாயம் என்றும் பாராமல் கொடியமுறைகளை அனுஷ்டித்து விடுகின்றனர். பிறகு அவர்கள் புரிந்தசெயல்களை மறைக்கப் பொய் கூறவும் தயங்குவதில்லை. கிராமங்களில் வீடுதோறும் பட்டாணியர் காவல் புரிகின்றனர் என்ற செய்தி எனக்கு வியப்பையோ, ஆத்திரத்தையோ உண்டு பண்ணவில்லை. இன்னும் அவர்கள் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தாமையே எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. இதுவரை இருந்ததுபோல் பொறுமையுடன் பலாத்காரத்தில் புகாது ஜனங்கள் இருக்க வேண்டும். அரசாங்கத்தார் இன்னும் கடுமையான முறைகளைக் கையாள ஒரு நிபமே தேடுகின்றனர். அதற்கு இடங்கொடுக்கலாகாது. அரசாங்கத்தார் கொடுமை தாங்கமுடியாது போய்விடுமாயின் தங்களது என நினைக்கும் பொருள்களையும், வீட்டையும் விட்டுவிட்டு வெளியேறி விடவேண்டும். பிளேக் பாவினால் வீடுகளைவிட்டு விலகுவதுபோல் கொடுங்கோன்மை பிளேக்கிற்கும் அஞ்சி வெளியேறுதலே முறை.

"ஆனால் அம்மாதிரியானநிலை இன்னும் ஏற்படவில்லை. இனியும்ஏற்படாதென்றே நம்புகிறேன். சில கனவான்கள் இதில் தலையிட்டு முடிவுசெய்ய முன்வந்துள்ளார்கள். அவர்கள் யார்பக்கமும் சலுகை காட்டாது பக்ஷபாதமில்லாத மத்தியஸ்தத்தைச் செய்யவேண்டு மென்பதே எனது கோரிக்கை.

"நிற்க, பொதுஜனங்கள் செய்யவேண்டுவது மொன்றுளது கஷ்டப்படும் ஜனங்களுக்கு உதவப் பொருளுதவி செய்யவேண்டும். இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பினரும் எல்லாக்கட்சியினரும் ஜூன்மாதம் 12-ம் தேதியைப் பர்தோலி தினமாகக்கொண்டு, அன்று பொதுக்கூட்டங்கள் போட்டு ஒரு நிதியை வசூலித்துப் பர்தோலிக்கு அனுப்பவேண்டும்."

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"
11, Vellala Street, Purasawalkum, Madras.

Dr. Orison Swett Marden's World-Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for; To succeed in your chosen calling; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition Rupee 1-8-0 each

V. KALYANARAM IYER & Co.,
BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)